ஆகஸ்ட் 2014 August | இதழ் 283 ISSUE

# தமிழர் தகவல்

# TAMILS' INFORMATION



றொறன்ரோவில்
'கறுப்பு ஜூலை' நிகழ்வு







மகிந்த விஜயத்தை
தடுத்து நிறுத்திய எழுச்சி

24 வது ஆண்டில்
th Year

Growing
with the
Community
ESTD-1991

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழர் தகவல்
TAMILS' INFORMATION

ISSN 1206-0585

ஆரம்பம்
பெப்ரவரி 1991

P.O. Box - 3, Station F
Toronto, ON. M4Y 2L4,
Canada

தொலைபேசி
416 920 9250
தொலைநகல்
416 921 6576

மின்னஞ்சல்
tamilsinfo@sympatico.ca

தயாரிப்பு
ஈழத்தமிழர் தகவல் நிலையம்,
ரொறன்ரோ &
தமிழர் தகவல் ஆய்வுப் பிரிவு

வெளியீடு
அகிலன் அசோஷியேற்ஸ்

முதன்மை ஆசிரியர்
திரு எஸ். திருச்செல்வம்

இணை ஆசிரியர்
ரஞ்சி திரு

உதவி ஆசிரியர் &
தயாரிப்பு முகாமையாளர்
சசி பத்மநாதன்

உதவி ஆசிரியர்கள்
குயின்ரஸ் துரைசிங்கம்
அனோஜினி குமாரதாசன்

பொது முகாமையாளர்
எஸ். ரி. சிங்கம்

விநியோக முகாமையாளர்
ஆர். ஆர். ராஜ்குமார்

பொதுமக்கள் தொடர்பு
இ. சிவலிங்கம்
எஸ். திருமுருகா
ப. சிவசுப்பிரமணியம்
பொன். சிவகுமாரன்
என். குமாரதாஸன்

தொழில்நுட்ப உதவி
ஹரன் கிறாஃப்

மாதாந்தம்
5000 பிரதிகள்

ஆண்டு மலர்
6000 பிரதிகள்

ஆசிரியரிடமிருந்து — **From the Editor**

## வான வீதித் துன்பியல்

வான வீதியில் அடிக்கடி இடம்பெறும் விமான விபத்துகள், ஆழமான துயரை மட்டுமன்றி அதிர்ச்சியையும் தருகின்ற துன்பியலாக அமைந்துள்ளது.

ஓரிரு விமானங்கள் இயந்திரக் கோளாறினால் விபத்தில் சிக்குவதும், சீரற்ற காலநிலை நெருக்கடியால் சில விமானங்கள் அவசர தரையிறக்கத்தில் நொருங்கிச் சிதறுவதும் எப்போதாவது நிகழ்வதுண்டு.

ஆனால் இன்று அப்படியல்ல; நடப்பும் நிகழ்வும் முற்றிலுமாக மாறிவிட்டது! இவ்வாறான வான்விபத்துச் செய்திகளை மக்கள் ஒருவகைச் சந்தேகப் பார்வையுடனேயே படிக்கின்றனர்.

உள்நாடுகளிலுள்ள வீதிகளில் அங்குமிங்குமாக ஓடித்திரியும் வாகனங்கள் அடிக்கடி விபத்துக்குள்ளாவதுபோல, விண்வெளியில் விமானங்கள் விபத்தில் சிக்குவது இன்று மிகச்சாதாரண செய்தியாகி விட்டது.

விபத்து என்பது எதிர்பாராது நடைபெறுவது. ஆனால் இன்று 'விபத்து' என்று கூறப்படுபவது அதன் எல்லைக் கோட்டைத் தாண்டி, 'தாக்குதல்' அல்லது 'திட்டமிட்ட அழிப்பு' என்ற வரையறைக்குள் சென்று விட்டது.

இவ்வாறான தாக்குதல்களும், திட்டமிட்ட அழிப்புகளும் பெரும்பாலும் யுத்த வேளைகளிலும் யுத்த களங்களிலுமே நடைபெறுவதுண்டு. அப்போது விமானச் சிப்பந்திகளும், யுத்தத்தில் ஈடுபடும் படையினருமாகச் சிறு தொகையினரே மரணிப்பர். இதனால் இவை யுத்தச் செய்திகளாகவே பார்க்கப்படுவது வழக்கம்.

ஆனால், இன்றைய வான்வெளி விபத்துகளை யாரோ எங்கிருந்தோ திட்டமிட்டு நடத்துவதாகவே நோக்க வேண்டியுள்ளது.

கடந்த மார்ச் மாதம் கோலாலம்பூரிலிருந்து 239 பேருடன் புறப்பட்ட மலேஷியாவின் எம்.எச்.370 விமானம் ஒரு மணித்தியாலத்துக்குள் மாயமாக மறைந்துவிட்டது. இன்றுவரை தேடுதல் நடைபெறுகின்றது. எந்தத் தடயமும் கண்டுபிடிக்கப்படவில்லை.

ஜூலை பதினேழாம் திகதி அம்ஸ்ரடாமிலிந்து 298 பேருடன் புறப்பட்ட மலேஷியாவின் எம்.எச்.17 விமானம், உக்ரைன் யுத்தப் பிரதேசத்தில் வீழ்த்தப்பட்டது. ரஷ்ய தயாரிப்பான ஏவுகணையொன்று முப்பதாயிரம் அடிக்கு மேலாகப் பறந்த விமானத்தைப் பதம் பார்த்துள்ளது. விமானத்திலிருந்த சுமார் நூறு குழந்தைகள் உட்பட ஒருவர்கூட மிஞ்சவில்லை. இறந்தவர்களில் ஒருவர் கனடிய இளைஞர்.

ஜூலை 23ம் திகதி தாய்வான் விமானமொன்று ஐம்பதுக்கும் அதிகமான பயணிகளுடன் காலநிலை சீரின்மையால் சிதறி வீழ்ந்தது. அனைவரும் மரணித்தனர்.

மறுநாள் அல்ஜீரிய விமானமொன்று மாலி பாலைவனப் பகுதியில் வீழ்ந்து நொருங்கியது. அல்ஜீரிய ஜனாதிபதியின் மகள் உட்பட 116 பேரும் கொல்லப்பட்டனர். இவர்களுள் ஐவர் கியுபெக் வாசிகள்.

அடுத்த விமான விபத்து எப்போது, எங்கே என்ற அச்சத்துடனேயே விமானங்களில் ஏறும் நிலை உருவாகியுள்ளது கவலை தருவது.

வான வீதி என்பதை 'மயான வீதி'யாகவே பொதுமக்கள் கருதும் காலம் நெருங்கி வந்துவிட்டது!

திரு எஸ். திருச்செல்வம்

தமிழர் தகவல்
TAMILS' INFORMATION

ISSN 1206-0585

Established
February 1991

P.O. Box - 3, Station F
Toronto, ON. M4Y 2L4,
Canada

Tel: 416 920 9250
Fax: 416 921 6576

email
tamilsinfo@sympatico.ca

Produced by
Eelam Thamil Information Centre (ETHIC) of Toronto & Thamil Information Research Unit (THIRU)

Published by
Ahilan Associates

Editor in chief
Thiru S. Thiruchelvam

Associate Editor
Ranji Thiru

Assistant Editor and Production Manager
Sasi Pathmanathan

Assistant Editors
Quintus Thuraisingam
Anojini Kumaradasan

General Manager
S.T. Singam

Circulation Manager
R. R. Rajkumar

Public Relation
R. Sivalingam
S. Thirumuruga
P. Sivasubramaniam
Pon. Sivakumaran
N. Kumaradasan

Technical Support
Haran Graph

Monthly
5000 Copies

Annual
6000 Copies



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பி.பி.சி தமிழோசை இலண்டனிலிருந்து இந்திய தலைநகருக்கு இடம் மாறுகிறது!

சர்வதேசப் பிரபல்யமான லண்டன் பி.பி.சியின் தமிழோசை, விரைவில் இந்தியத் தலைநகரான புதுடில்லிக்கு மாற்றம் செய்யப்படவுள்ளது.

பி.பி.சியின் உலக மொழிச் சேவைகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் மாற்றங்களில் இதுவும் ஒன்றாகும். அதன் தற்போதைய நிதிப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய 2017ம் ஆண்டு வரையும் இவ்வகையான மாற்றங்கள் மேற்கொள்ளப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பி.பி.சி வானொலியின் இந்தி மொழிச் சேவை ஏற்கனவே புதுடில்லிக்கு மாற்றப்பட்டுள்ளது. தமிழோசைச் சேவையும் இந்தி மொழிச் சேவை நடைபெறும் அதே அலுவலகத்திலிருந்து இயங்கும்.

இந்தியா மற்றும் இலங்கை நேயர்களையும், மற்றைய நாடுகளில் வாழும் தமிழ் ஆர்வலர்களையும் கருத்தில் கொண்டு தொடர்ந்து தமிழோசை ஒலிபரப்பாகுமென்று பி.பி.சி பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

பி.பி.சி தமிழோசை 1941ம் ஆண்டு மே மாதம் 8ம் திகதி வாரமொரு நாள் சேவையாக ஆரம்பிக்கப்பட்டது. இச் சேவைக்கு 'தமிழோசை' எனப் பெயர் சூட்டியவர் மூத்த ஒலிபரப்பாளரும் இலங்கை வானொலியின் முதலாவது தமிழ் நிகழ்சசி அதிகாரியுமான சோ. சிவபாதசுந்தரம் அவர்கள். இவரே தமிழோசையின் முதலாவது நிகழ்ச்சித் தயாரிப்பாளராகவும் கடமையாற்றியவர். திரு.தாசீஷியஸ், திரு. வி. சுந்தரலிங்கம் (சுந்தா) ஆகியோர் தமிழோசையின் நிகழ்ச்சித் தயாரிப்பாளர்களாகக் கடமையாற்றிய குறிப்பிடத்தக்க ஈழத்தமிழர்கள்.

1980ம் ஆண்டு தமிழோசை வாரம் இரு தடவை ஒலிபரப்பாகும் நிகழ்ச்சியாக மாற்றம்பெற்று, 1980களின் பிற்பகுதியிலிருந்து தினசரி முப்பது நிமிட நிகழ்ச்சியாக ஒலிபரப்பாகி வருகின்றது.

புலம்பெயர்ந்த தமிழர்களால் உலகளாவிய ரீதியில் நடத்தப்படும் தமிழ் வானொலிச் சேவைகள், பி.பி.சியின் தமிழோசையைத் தங்கள் நிகழ்ச்சிகளின் ஊடாகத் தினமும் தவறாது தங்கள் நேயர்களுக்கு வழங்கி வருகின்றன.●

## அகதிகள் வைத்திய செலவுக்காக இரண்டு மில்லியன் டாலர் தரவேண்டுமென மத்திய அரசிடம் ஒன்ராறியோ அரசு கோரிக்கை

# Ontario will bill Ottawa $2 million For refugee health costs

அகதிக் கோரிக்கையாளர்களுக்கு மனிதாபிமான ரீதியில் வைத்திய சேவை வழங்கியமைக்காக ஒன்ராறியோ மாகாண அரசுக்கு கனடிய மத்திய அரசு இரண்டு மில்லியன் டாலர்கள் வழங்க வேண்டுமென மாகாண சுகாதார அமைச்சர் எரிக் ஹொஸ்கின்ஸ் அறிவித்துள்ளார்.

கனடிய அரசாங்கம் அகதிக் கோரிக்கையாளர்களில் ஒரு பகுதியினருக்கு புதிய சட்ட மாற்றங்களின் அடிப்படையில் வைத்திய வசதியை மறுத்துள்ளது. இது தொடர்பாகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்கொன்றுக்கு கனடிய மத்திய நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பில், பிரதமர் ஸ்டீபன் ஹாப்பர் அரசாங்கத்தின் இந்த முடிவு, வழக்கத்துக்கு மாறானதென்றும் கொடூரமானதென்றும் சுட்டிக்காட்டியிருந்தது.

Ontario is sending Ottawa the bill for the 2 million dollar the province will spend this year on basic medical services for refugees, says Ontario Health Minister Eric Hoskins. Bolsterd by a Federal Court decision earlier last month that said Prime Minister's cuts to coverage were 'cruel and unusual', the province is stepping up its fight with the federal government. Ontario's Temporary Health Program is helping patients after Ottawa's 'vacating' measure to save money.

அதேசமயம், விசேஷ நிகழ்ச்சித் திட்டமொன்றின்கீழ் ஒன்ராறியோவில் வசிக்கும் அகதிகளுக்கு மாகாண அரசாங்கம் மத்திய அரசின் முடிவை ஏற்றுக்கொள்ள மறுத்து, இலவச அடிப்படை வைத்திய சேவையை வழங்கி வருகின்றது. இங்குள்ள மருத்துவர்களின் அமைப்புகளும் அகதிகளுக்கான சேவை நிறுவனங்களும் இதற்கு ஆதரவாக இருந்து வருகின்றன.

மத்திய நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பின் அடிப்படையில், ஒன்ராறியோ அரசாங்கத்துக்கு கனடிய மத்திய அரசு இரண்டு மில்லியன் டாலர்களை வழங்க வேண்டுமென மாகாண சுகாதார அமைச்சர் தெரிவித்துள்ளார்.

கனடிய அரசாங்கத்தின் வைத்திய சேவை வெட்டினால் பெருமளவில். பாதிக்கப்பட்டவர்கள் கர்ப்பிணிகளும், அகதிக் கோரிக்கை நிராகரிக்கப்பட்டவர்களுமே. மத்திய அரசாங்கத்தின் முடிவையும் மீறி மனிதாபிமான ரீதியாக இவர்களுக்கு அடிப்படையான வைத்திய வசதிகளை ஒன்ராறியோ மாகாண அரசு தன்னிச்சையாக முடிவெடுத்து வழங்கி வருகிறது.

ரொறன்ரோவிலுள்ள மகளிர் வைத்தியசாலையில் வருடமொன்றுக்கு 1200 வரையான அகதி நிலையிலுள்ள கர்ப்பிணிப் பெண்கள் வைத்திய சேவையைப் பெறுவதை அமைச்சர் ஹொஸ்கின்ஸ் சுட்டிக் காட்டியுள்ளார்.

ஒன்ராறியோ மாகாண அரசின் நடவடிக்கைக்குச் சாதகமாக அமையும் வகையில் மத்திய நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை கனடிய அரசு விரும்பவில்லை. இதனால் நீதிமன்றத் தீர்ப்பை ஆட்சேபித்து மேன்முறையீடு செய்யப்போவதாக குடிவரவு பிரஜாவுரிமைகள் அமைச்சர் கிறிஸ் அலக்சாந்தர் அறிவித்துள்ளார்.

கனடிய அரசாங்கம் ஏற்படுத்திய வைத்திய சேவை வெட்டினால் அகதிக் கோரிக்கையாளர்களின் குழந்தைகள் பெருமளவில் பாதிக்கப்படுவதாக தீர்ப்பு வழங்கிய நீதிபதி ஆன் மக்டவிஸ் எச்சரித்துள்ளார். கியுபெக், அல்பேர்ட்டா, மனிரோபா, சஸ்கச்சுவான் மற்றும் நொவாஸ்கொஷியா மாகாண அரசாங்கங்களும் மத்திய அரசாங்கத்தின் வைத்திய சேவை வெட்டினைக் கண்டித்துள்ளன.●





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



றஞ்சி திரு

# சின்னச் சின்ன தகவல்கள்

புதிதாகக் கனடிய பிரஜாவுரிமை பெறுபவர்களின் எண்ணிக்கையில் ஸ்காபரோ முதலிடத்துக்கு வந்துள்ளது. கடந்த ஜுன் மாதத்தில் மட்டும் இங்கு 3,900 ஆட்கள் கனடியப் பிரஜாவுரிமையைப் பெற்றுள்ளனர். இவர்கள் 125 நாடுகளைச் சேர்ந்தவர்கள். அடுத்த இடத்தில் மொன்றியல் உள்ளது. இங்கு கடந்த ஜுன் மாதம் 135 நாடுகளைச் சேர்ந்த சுமார் மூவாயிரம் ஆட்கள் கனடியப் பிரஜாவுரிமையைப் பெற்றுள்ளனர்.

கனடாவில் பணவீக்கத்தின் காரணமாக பாவனைப் பொருட்களின் விலை அதிகரித்துள்ளது. எரிபொருள், உணவுப் பொருட்கள், காய்கறிகள் என்பவற்றுக்குக் கடந்த இரண்டு வருடங்களில் கூடிய பணத்தை நுகர்வோர் செலவு செய்கின்றனர். உணவுப் பொருட்களின் விலை சுமார் மூன்று சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. ஆனால், காய்கறிகள் சுமார் 9.5 சதவிதத்தினால் அதிகரித்துள்ளது.

வாகனங்களை ஓட்டும்போது குறுந்தகவல்களை (SMS) அனுப்புபவர்களில் இளைஞர்களே அதிகமாகவிருப்பதாகவும், முக்கியமாக உயர் வகுப்புகளில் கல்வி கற்கும் மாணவர்களே காணப்படுவதாகவும் பொலிசார் தெரிவித்துள்ளனர். குறிப்பிட்ட ஒரு காலப்பகுதியில் இவ்வாறு குறுந்தகவல் அனுப்பிய 18,000 மாணவர் அகப்பட்டதாகவும், இது மொத்தத் தொகையில் 46 சதவிகிதம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே பாவித்த வாகனங்களைக் கொள்முதல் செய்பவர்கள் அவைகளையிட்டு எச்சரிக்கையாக இருக்க வேண்டுமென பொலிசார் எச்சரிக்கின்றனர். வாகனங்களின் பிரத்தியேக அடையாளமான - வின் (WIN) இலக்கத்தை மாற்றிப் பொருத்தி விற்பனை செய்வதை பொலிசார் கண்டிபிடித்துள்ளனர். முக்கியமாக, ஒன்ராறியோவில் களவாடப்படும் வாகனங்களே இந்த மோசடிக்குள்ளாகின்றன.

கனடிய கடற்படைக் கப்பலொன்றின் பணியாளர்கள் பாலியல் முறைகேடு, திருட்டு, குடிபோதை போன்றவற்றில் ஈடுபட்டதாகக் கிடைத்த புகாரையடுத்து அக்கப்பல் பிரிட்டிஷ் கொலம்பியா தளத்துக்கு உடனடியாக மீள அழைக்கப்பட்டது. அமெரிக்க கடற்படையுடன் இணைந்து அதன் கரையொன்றில் கூட்டுப் பயிற்சியில் ஈடுபட்டிருந்த வேளையில் இந்தக் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டது.

ரொறன்ரோ டொன்வலி பார்க் சாலையில், எக்லின்டனுக்கும் லோரன்சுக்குமிடையேயுள்ள வானவில் வர்ண அமைப்பிலான சுரங்கப் பாதை ஒன்றின் ஓவியத்தை 15.5 மில்லியன் டாலர்களுக்கு இங்கிலாந்தின் லண்டனைச் சேர்ந்த ஒருவர் வாங்கியுள்ளார். ஸ்கொட்லாந்தைச் சேர்ந்தவரும் ரொறன்ரோவில் வசிப்பவருமான பீற்றர் ரொய்க் என்பவர் 1999ல் இந்த ஓவியத்தை உருவாக்கியிருந்தார்.

கனடாவில் இப்போது வேலையிழப்போர் தொகை மாதாந்தம் அதிகரித்து வருகின்றது. கடந்த ஜுன் மாதத்தில் மட்டும் 9400 பேர் வரை வேலை இழந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. கடந்த டிசம்பர் மாதத்திலிருந்து இவ்வகையான வேலையின்மை நாடு முழுவதும் உயர்வடைந்து வருகின்றது. இக்காலப் பகுதியில் ஒன்ராறியோவில் மட்டும் சுமார் 34,000 பேர் வேலையிழந்துள்ளனர்.

குயிபெக்கின் நகரங்களில் ஒன்றான லா பிரெய்ரின் மேயரான லுசி றெளசல் (51) குளவிகள் கொட்டியதால் கடந்த மாத இறுதியில் மரமணமானார். தமது விடுமுறை இல்லத்தில் ஓய்வெடுக்கச் சென்றிருந்த வேளையில், படுக்கையறையில் கூடு கட்டியிருந்த குளவிகள் அவரை மொய்த்துக் கொட்டியதால் அவர் மரணமாக நேர்ந்தது. நான்கு ஆண்டுகளுக்கு முன்னர் கணவரை இழந்த இவருக்கு இரண்டு பிள்ளைகள் உள்ளனர்.

## பேராசிரியர் கா. சிவத்தம்பி மூன்றாவதாண்டு நினைவுகூரல்

தகைசார் ஓய்வுநிலைப் பேராசிரியர் கா. சிவத்தம்பியின் மூன்றாவதாண்டு நினைகூரல் வைபவம் கடந்த மாதம் ஆறாம் திகதி ஸ்காபரோ காரைக்குடி செட்டிநாடு உணவகத்தில் சிறியளவிலான ஒரு நிகழ்ச்சியாக நடத்தப்பட்டது. பேராசிரியரின் பல்துறை ஆளுமையை எடுத்தியம்பும் வகையில் ஏற்பாடான இந்நிகழ்வில் பேராசிரியர் குறித்த சிறப்புரை மற்றும் அவர் குறித்த ஆய்வுக் குறிப்புரை ஆகியன இடம்பெற்றன. இலங்கையில் தயாரிக்கப்பட்ட 'Tears of Blood' என்னும் குறுந்திரைப்படம் பேராசிரியர் நினைவாக இங்கு திரையிடப்பட்டது.

## மேயர் போஃர்ட் ஆதரவு அசையவில்லை

ரொறன்ரோ மேயர் பதவிக்கு மீண்டும் போட்டியிடும் றொப் போஃர்ட் பல உறுதிமொழிகளை மக்களுக்கு வழங்கி வருகிறார். மஸ்கோவா புனர்வாழ்வு நிலையத்தில் இரண்டு மாதம் தங்கியிருந்து சிகிச்சையுடன் கூடிய பயிற்சி பெற்ற பின்னர் கடந்த மாதம் மீண்டும் தமது கடமைக்குத் திரும்பினார். தாம் மீண்டும் தெரிவு செய்யப்பட்டால், உணர்ச்சிவயப்படாத மிதமான நிதானபுத்தியுடையவராகச் செயற்படுதற்கு உத்தரவாதமளிக்க முடியதென்று தெரிவித்து வருவது பலருக்கும் அதிர்ச்சியளித்துள்ளது. ஆனாலும், ரொறன்ரோ மக்கள் மத்தியில் அவருக்கிருக்கும் வரவேற்பும் ஆதரவும் குறையவில்லையென்று கருத்துக் கணிப்புகள் தெரிவிக்கின்றன.

## 'வானொலி ஊடகவியல்' நூல் வெளியீடு

எழுத்தாளரும் கல்வியியலாளருமான 'பெரும்புலவர்' மொகமட் ஹன்சீர் எழுதிய 'வானொலி ஊடகவியல்' நூலின் வெளியீட்டு விழா இந்த மாதம் (ஆகஸ்ட்) 23ம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 3:30 மணிக்கு ஸ்காபரோ சிவிக் சென்டர் கவுன்சில் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. எழுத்துலக நண்பர்கள் ஆர்வலர்கள் அனைவரையும் விழாவிற்கு வருகை தருமாறு நூலாசிரியர் வேண்டுகின்றார். மேலதிக விபரங்களுக்கு நூலாசிரியருடன் 647 522 1357 இலக்கத்தில் தொடர்பு கொள்ளவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். குடா நாட்டில் இன்று பல சிங்களக் கிராமங்கள்


மாதிரிக்கு இது ஒன்று

ஆரம்பத்திலேயே சொல்கின்றேன் இது ஒரு அரசியல் கட்டுரை அல்ல. ஆனால் அவசியம் தெரிந்து கொள்ளவேண்டியது.

காங்கேசன்துறை என்றதும் தந்தை செல்வா ஞாபகம் வரும். அந்தக்காலத்தில் வடக்கில் இருந்த இருபெரும் தொழிற்சாலைகள் பரந்தன் இரசாயனத் தொழிற்சாலையும், சீமெந்துத் தொழிற்சாலையுமே! சிமெந்து தொழிற்சாலை இங்கேதான் இருந்தது.

அடுத்து காங்கேசன்துறை துறைமுகம். 1983 இனக்கலவரத்தின்போது கப்பலில் வந்து இங்குதான் இறங்கினோம். காங்கேசன்துறை - இதனை கே.கே.எஸ். என்றுதான் தமிழ் வாத்தியாரும் சொல்லுமளவிற்கு ஓர் இனிப்பு அந்தச் சொற்களுக்குள் இருந்தது.

இவை மட்டுமா? யாழ்தேவி மெயில் ரெயின் இங்கு இருந்து புறப்பட்டுதான் கொழும்புக் கோட்டையை அடைந்தன. இலங்கையின் மிக நீண்ட புகையிரத சேவையான (256 மைல்) கொழும்பு - காங்கேசன்துறை சேவை 1990 ஆம் ஆண்டிலிருந்து நிறுத்தப்பட்டுள்ளது. தற்போது பளை வரை வருகிறது. தெல்லிப்பளை வரை புகையிரத நிலையம் அமைக்கும் பணி நடைபெற்று வருகின்றது. ரயில் காங்கேசன்துறை வரை சென்றாலும் தமிழ் மக்கள் எது வரை என்பது தெரியவில்லை.




யாழ்ப்பாண புகையிரத நிலையத்தில் சென்று ரெயின் பிடித்தால் நின்று கொண்டுதான் போகவேண்டும். இருக்க இடம் கிடையாது. அதனால் எமக்கோ, சகோதரர்களுக்கோ, காதலிக்குக்கூட இடம்பிடிக்க என்றே கே.கே.எஸ் போய் ஏறி வருவோம்.

அடுத்து தியேட்டர்கள். முதலில் ராஜநாயகி - பின் யாழ் தியேட்டர். இந்த இரண்டும்தான் அன்று எங்களுக்கு கிட்ட இருந்த தொலைக்காட்சிகள். வருடத்தில் 3 அல்லது 4 புதுப்படங்கள் யாழ்ப்பாணம் வரும். அவை அங்கு மாதக்கணக்கில் ஓடி, படம் அறுந்து ஒட்டி ஒட்டி இளைத்தபின் காங்கேசன்துறை ராஜநாயகிக்கு வரும்.

வசந்தமாளிகை என்றால் என்ன? பெரிய இடத்துப்பெண் என்றால் என்ன? வாலிப விருந்து என்றால் என்ன எங்க ஊர் ராஜா தான் கைகொடுக்கும் தெய்வம்.
படத்திற்கு சயிக்கிளில் வறுகுவோம். ஆங்கிலம் கற்றதும் இந்த தியேட்டரில்தான். இங்கிலீசுப் படமும் தவற விட்டதில்லை.

கறுப்பு வெள்ளைப் படம்போல இன்னும் மனத்திரையில் ஓடுது காட்சிகள். தேத்தண்ணியுடன் வடை சூசியம் போண்டா இவைதான் எங்கடை 'சைட் டிஷ்' அன்று. மெயின் டிஸ்ஸுக்கு எங்கு அலைந்தாலும் கடைசியில் வீட்டைதான் போகவேணும்.

முப்பது வருடங்களுக்குப்பின் முன் அனுமதி பெற்று எனது காங்கேசன்துறை தொகுதிக்குள் கடந்த மாதம் கால் வைத்தேன்.

என்ன அழகு. கடற்கரை, கலங்கரைவிளக்கம். கடலோடு காற்று வாங்கிக்கொண்டு செல்லும் தெரு. வேலி. மதில். தெருக்களில் ஒரு குப்பை இல்லை. சைக்கிளை விட்டுத் துரத்தும் அந்த நாய்கள் இல்லை. அப்படியே அப்படியே மலைப்பேறிட காங்கேசன்துறை சந்தியை அடைந்தேன்.

இடப்பக்கம் திரும்பினால் கீரிமலை. வலப்பக்கம் திரும்பினால் மயிலிட்டி. ஊர்ப் பெயர்களை வாசிக்கும்போதே வாயூறும். காரணம் புரியாத பெயர்களை ஐரோப்பாவில் வாசித்து வாசித்து நாக்கே மரத்துப் போச்சு.

எம் ஊர்பெயர்கள் வாசிக்க காதலியின் பெயரை வாசிப்பதுபோல் ஒரு இளமைத் துள்ளல் நெஞ்சுக்குள்.

அழகான கிராமம். எப்படி அழகாக வைத்திருக்கிறார்கள். ஒரு வரையும் தெருவில் காணவில்லை.

அது மட்டுமல்ல! தெருவில் ஒரு சைக்கிளும் என்னை விலத்தவில்லை. பாடசாலைக்கு பிள்ளைகள் எவரும் செல்லவில்லை. கலங்கரை விளக்கத்தின் கீழ் அன்று நிற்கும் சைக்கிள் நண்பர்கள் எவரையும் காணவில்லை. மொத்தத்தில் அந்தக்கிராமத்தில் அந்தக் கிராமத்து மக்கள் எவரும் இல்லை.

ஆம், அது ஒரு பாதுகாப்புப் பிரதேசமாக, ஆனால் சுற்றுலாப்பயணிகள் வந்து குதுகலித்து திரும்பும் ஒரு சிங்களக் கிராமம் போல் மாற்றம் கண்டு இருந்தது.

'தல் செவன' முற்றுமுழுதாக பாதுகாப்பு படையினரின் பராமரிப்பில் இயங்குகின்ற அழகிய விடுதி. காங்கேசன்துறை துறைமுகத்திற்கு மிக அருகில் இந்த விடுதி அமைந்திருக்கிறது. இலங்கையில் உச்சியிலிருந்து அதன் அழகினை ரசிப்பதற்கு ஏற்றவகையில் அழகுற விடுதி அமையப் பெற்றிருக்கிறது. பரந்து விரிந்திருக்கின்ற கடற்பரப்பு கண்கொள்ளாக் காட்சி. தூய்மையான கடற்காற்று மனதுக்கு ரம்மியத்தை ஏற்படுத்துகிறது. கண்ணுக்கெட்டிய தூரம்வரை கடற்பரப்பு விரிந்து காணப்படுகிறது. வரலாற்றுப் புகழ்மிக்க காங்கேசன்துறை வெளிச்சவீடு அண்மையில் தெரிகிறது. பழைய நினைவுகளை புதிய சுவாசத்துடன் காட்டும் இடம் 'தல் செவன'.

பல இராணுவ அதிகாரிகளும் சிப்பாய்களும் சாதாரண உடைகளில் சுற்றுலாப் பயணிகளுக்கு பணிவிடை செய்கின்றனர். இராணுவத்தின் பெண்கள் பிரிவினைச் சேர்ந்தவர்கள் வரவேற்பு அறையில் கடமையாற்றுகிறார்கள். 'தல் செவன' சுற்றுலா விடுதி படையினரால் நடத்தப்படுகின்ற போதிலும் சீருடையில் எவரும் அங்கு கடமையாற்றுவதில்லை. மக்களோடு மக்களாக சாதாரண மனிதர்களாகவே அவர்கள் காட்டப்படுகின்றனர். அதீத

(31ஆம் பக்கம் வருக)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



டாக்டர் எம். கே. முருகானந்தன்

# நீரிழிவு வராமல் தடுக்க முடியுமா?

சீனி சாப்பிடாவிட்டால் நீரிழிவு வருத்தம் வராதுதானே. நீரிழிவு நோய் வராமல் தடுப்பதற்கு என்ன செய்ய வேண்டும் என்பதற்கு ஒருவர் மனைவிக்கு அளித்த விளக்கம் அது.

தாய் தகப்பனுக்கு இருந்தால்தான் பிள்ளைகளுக்கும் வரும் என்றார் மற்றொருவர்.

நீரிழிவைத் தடுப்பதற்கான வழிமுறைகளாக ஒவ்வொருவரும் தாம் நினைத்ததை எல்லாம் சொல்கிறார்கள்.
ஆனால் சீனி சாப்பிடாவிட்டாலும் வருகிறது. பரம்பரையில் இல்லாவிட்டாலும் வருகிறது. அப்படியானால் தடுப்பது எப்படி?

- போஷாக்குள்ள உணவாக உட்கொள்ளல். ஆனால் இது சீனியைத் தவிர்ப்பது என்று அர்த்தம் அல்ல.
- தினசரி உடற்பயிற்சி செய்தல் அல்லது உடல் உழைப்பில் ஈடுபடுதல்.
- உடல் எடையை சரியான அளவில் பேணுதல் எனச் சுருக்கமாகச் சொல்லலாம்.

## போசாக்கு உணவு

போசாக்குள்ள உணவு என்பது என்ன? இனிப்பு, எண்ணெய், நொறுக்குத் தீனி போன்றவற்றை மிகக் குறைவாக உண்ணல். மாப்பொருள் உணவை அளவோடு உண்ணல், புரத உணவுகளை தேவையான அளவில் உண்ணல், காய்கறி மற்றும் பழவகைகளை அதிகம் உண்ணல் எனச் சொல்லலாம்.

தினமும் ஒவ்வொரு பங்கும் 80 கிராம் நிறையுள்ளதாக 5 பங்கு அளவில் காய்கறிகளையும் பழவகைகளையும் உணவில் சேர்க்க வேண்டும் என்பது பொதுவாக ஏற்கப்பட்ட கருத்தாகும்.

எத்தகைய காய்கறி உணவுகள் நீரிழிவு வராமல் தடுக்க உதவும் என்பது அடுத்த கேள்வியாக இருக்கும்.

மாப்பொருள் குறைந்த அளவுள்ள காய்கறிகள் நல்லது. கிழங்கு வகைகளில் மாப்பொருள் உள்ளதாயினும் அவற்றில் நார்பொருளும் நீர்ச்சத்தும் அதிகம் இருப்பதால் அளவோடு உண்பதில் தவறில்லை. ஏனைய காய்களிகளில் மாப்பொருள் குறைவாகவும், நார்ப்பொருள் அதிகமாகவும் உள்ளதால் நல்லது. இலைவகைகள் மேலும் சிறந்தவை என்கிறார்கள்.

## நீரிழிவைத் தடுக்கும்

பச்சை நிறமான இலைவகைகள் அதிகளவு உட்கொள்ளும் உணவு முறையானது நீரிழிவு ஏற்படுவதற்கான சாத்தியத்தைக் குறைக்கிறது என University of Leicester யைச் சார்ந்த Patrice Carter தலைமையிலான ஒரு ஆய்வு கூறியது.

ஆறு ஆய்வுகளின் முடிவுகளை மீள்பரிசோதனை செய்த போது இது தெரிய வந்ததாம்.

- ஏனைய காய்கறிகள் உண்பவர்களை விட அதிகளவு பச்சை நிறமான இலைவகைகளை உண்பவர்களுக்கு மட்டுமே நீரிழிவு வருவதற்கான சாத்தியம் 14 சதவிகிதம் குறைவு என அது கூறியது.
- இது 13 வருடங்களாக 223,000 பேரிடையே செய்த அவதானிப்பின் முடிவு.

ஆனால் ஏனைய வகை காய்கறிகளையும் பழங்களையும் அதிகம் உண்பவர்களிடையே இந்த நீரிழிவுக்கு எதிரான சாதகமான பலன் கிடைப்பதாகத் தெரியவில்லை.

இதன் அர்த்தம் ஏனைய வகை காய்கறிகள் பழங்கள் பயனற்றவை என்பது அல்ல.

- ஏனைய பல ஆராய்ச்சி முடிவுகள் எல்லாப் பழவகைகளும், காய்கறிகளும் நீரிழிவைத் தடுப்பதில் பங்களிப்பதுடன், இருதயநோய்களுக்கான சாத்தியத்தையும் குறைப்பதாகக் கூறுகின்றன.
- ஆயினும் இலைவகை உணவுகளின் பங்களிப்பு அதிகம் என்பது இப்பொழுது தெரியவந்துள்ளது.

இலைவகை உணவுகளின் நற்பயன்களுக்குக் காரணம் என்ன? ஒட்சிசனெதிரிகள் காரணமாக இருக்கலாம் என ஆய்வாளர்கள் கருதுகிறார்கள். பசுமையான பச்சை இலைகளில் பீற்றாகரோட்டின், பொலிபீனோல்ஸ், விட்டமின் சீ போன்ற ஒட்சிசனெதிரிகள் மற்றும் மக்னீசியம் போன்ற தாதுப்பொருட்களும் தாராளமாக இருப்பதே காரணம் எனலாம்.

## பசிய இலை வகை உணவுகளின் போசாக்கு

- இலைவகைகள் மிகக் குறைந்தளவு கலோரிப் பெறுமானம் உள்ள உணவுகளாகும். அவற்றிலுள்ள மாப்பொருள்களானது நார்ப்பொருள்களிடையே அடைபட்டு இருப்பதால் எளிதில் சமிபாடடைவதில்லை. இதனால் நீரிழிவு நோயாளர்களின் இரத்த குளுக்கோஸ் அளவு அதிகரிப்பதைக் குறைக்கின்றன.
- இரும்பு, கல்சியம், பொட்டாசியம், மக்னீசியம் போன்ற கனியங்கள் உண்டு.
- விட்டமின் D வகைகளுடன், விட்டமின்கள் K, C, E ஆகியவை நிறையக் கிடைக்கின்றன. ஒரு கப் சமைத்த இலையுணவு ஒரு மனிதனுக்கு தினசரி தேவைப்படும் விட்டமின்கள் K யைவிட 9 மடங்கு அதிகமாகக் கொடுக்கும் எனத் தெரிகிறது.
- பீட்டாகரோட்டின், லியுடின் (beta-carotene, lutein, and zeaxanthin) போன்ற பைட்டோநியுரியன்டசை (phytonutrients) இலைவகை உணவுகள் தருகின்றன. இவை எமது உடற்கலங்கள் சேதமாவதைத் தடுக்கின்றன. வயது அதிகரிப்பால் ஏற்படும் பார்வை இழப்பை (Age related mascular degeneration) தடுப்பதிலும் இவை உதவுகின்றன.
- கொலஸ்டரோல் குறைப்பு, இருதய நோயிலிருந்து பாதுகாப்பு ஆகியவற்றிற்காக இப்பொழுது ஒமேகா 3 (Omeg 3 Fat) என்ற கொழுப்பை பலரும் பயன்படுத்துகிறார்கள். இது பெருமளவு ஆழ்கடல் மீன்களிலிருந்தே பெறப்படுகின்றது. ஆயினும் தாவர இலை உணவுகளிலும் இது சிறிதளவு காணப்படுகிறது.

## விற்றமின் கே(K)யின் நன்மைகள்

பசுமை நிறமான இலை வகைகளில் விற்றமின் K அதிகம் என்றோம். அதன் பலாபலன்கள் என்ன?

- குருதி உறைதலைக் கட்டுப்படுத்துகின்றது. மாரடைப்பு, பக்கவாதம் போன்றவை ஏற்படுவதற்கு குருதி உறைதல் முக்கிய காரணமாகும். மருத்தவ ரீதியாக இதைத் தடுப்பதற்கே குறைந்த அளவு அஸ்பிரின் (75-100mg) மற்றும் குளபிடோகிரில் போன்ற மருந்துகளை நீண்ட கால அடிப்படையில் கொடுக்கிறார்கள். தாவர இலை உணவுகளில் உள்ள விற்றமின் கே இயற்கையான பாதுகாப்பைக் கொடுக்கும்.●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கலாநிதி பால சிவகடாட்சம்

# தமிழில் காலக்கணிதம்

கி.மு. 580ஆம் ஆண்டளவில் மத்தியகிழக்கில் அமைந்திருந்த லிடியா மற்றும் மெடேஸ் ஆகிய நாடுகளுக்கிடையே ஆரம்பித்துத் தொடர்ந்து 5 வருடமாக நீடித்த ஒரு போரை முடிவுக்குக் கொண்டுவந்தது ஒரு சூரிய கிரகணமாகும். கி.மு 584ஆம் ஆண்டு மே மாதம் 28ஆம் திகதி பிற்பகல் 3 மணியளவில் ஆரம்பித்த பூரண சூரியகிரகணத்தைப் பார்த்து அஞ்சிய இருநாட்டுமக்களும் தமது யுத்தத்தினால் தெய்வக்குற்றம் ஏற்பட்டுவிட்டதற்கான அடையாளமே இது எனக்கருதி போரை நிறுத்தி சமாதான உடன்படிக்கை செய்து கொண்டனர்.

பண்டைய கிரேக்கத்தின் சப்தரிஷிகளுள் ஒருவராக எண்ணப்பட்டவரும் கிரேக்கத்தின் காலக்கணிதர்களின் முன்னோடி எனப் போற்றப்பெறுபவருமான மைலேற்றஸ் நகரத்து தேல்ஸ் (Thales of Miletus) என்பவர் இந்தக் கிரகணம் ஏற்படும் நாளை முன்கூட்டியே சரியாகக் கணித்துவைத்திருந்தார் என்று கூறப்படுகிறது.

வானியல் மற்றும் சோதிடம் என்பவற்றின் பிறப்பிடமாக புராதன நாகரிகங்களுக்கு உரியவர்களான பபிலோனியரும் சுமேரியரும் அசிரியரும் வாழ்ந்த இடம் மெசப்பொத்தேமியா என்று தான் நம்பப்படுகிறது. மழையை அல்லது ஆற்றில் வெள்ளபெருக்கை எதிர்பார்த்து வெள்ளாண்மை செய்யத்தொடங்கிய காலந்தொட்டு மக்கள் பருவகாலங்களைக் குறித்துவைத்து அவதானிக்கத் தொடங்கினர். பன்னிரண்டு ராசி மண்டலங்கள் பற்றிய சிந்தனையும் இங்குதான் வளர்ச்சிபெற்றது. zodiac என்னும் கிரேக்கச்சொல்லின் பொருள் மிருகங்களின் வட்டம் என்பதாகும்.

விதைப்புக்காலம் அறுவடைகாலம் என்பவற்றை அறிந்துகொள்ள இராசிகளின் நிலையை அடிப்படையாகக் கொண்ட கலண்டர்களை மெசப்பத்தேமியர்கள் உருவாக்கினர். இரவில் முழுநிலவும் பகலில் சூரியனும் திடீரென இருளால் மறைக்கப்படும் சந்திர சூரிய கிரகணங்கள் மக்களை அச்சத்தில் ஆழ்த்தின. கிரகணங்கள் ஏற்பட்ட காலங்களையும் சுமேரியர் குறித்துவைத்தனர். இந்தத் தரவுகள்தான் பிற்காலத்தில் கிரேக்கத்தின் வானியல் வல்லுநர்களுக்குக் கிரகணங்கள் ஏற்படும் காலத்தை முன்கூட்டியே கணிக்க உதவின.

பண்டைய கிரேக்கத்தின் வானநூலோருள் மிகப்பிரபலமான ஒருவர் குளோடியஸ் தொலமி. எகிப்தில் வாழ்ந்த ஒரு கிரேக்க குடும்பத்தில் பிறந்தவர். ரோமாபுரியின் குடிமகன். கி.பி. 127க்கும் கி.பி. 141க்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் எகிப்தின் அலெக்சாண்டிரியாவில் தனது வானியல் ஆய்வுகளை மேற்கொண்டார். சந்திரனதும் சூரியனதும் அசைவுகளைக் கணிப்பதன்மூலம் கிரகணங்கள் ஏற்படும் நாட்களைக் கணித்தறியும் கருதுகோளை தொலமி உருவாக்கினார்.

வானமண்டலத்தில் கிரகங்களின் சுற்றுப்பாதையையும் நிலைகளையும் அறிந்துகொள்வதற்கு இவர் உருவாக்கிய கணிதம் முக்கியமானதொன்றாகக் கருதப்படுகிறது. இவருடைய பதின்மூன்று நூல்களை உள்ளடக்கிய காலக்கணிதத்தொகுப்பு இன்று Almagest என்னும் பெயரால் அறிப்படுகிறது.

இந்தியவரலாற்றில் தலைசிறந்த காலக்கணிதருள் ஒருவராக எண்ணப்படும் வராகிமிஹ்ரர் கி.பி. ஆறாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். காலத்தால் முற்பட்ட சூரிய சித்தாந்தம், பிதாமகசித்தாந்தம், வசிட்டசித்தாந்தம், யவனசித்தாந்தம், ரோமகசித்தாந்தம் என்பவற்றின் சாரத்தை உள்ளடக்கி பஞ்சசித்தாந்திகா என்னும் நூலையும் பிருகத்ஜாதக என்ற பெருநூலையும் எழுதியவர்.

கிரகணங்கள் சந்திரனையோ சூரியனையோ ராகு என்னும் பாம்பு விழுங்குவதால் ஏற்படுவதில்லை. ராகு தன்னிச்சையாக அசையும் ஒரு பொருளாக இருப்பின் அது வரும் காலத்தை எவராலும் முன்கூட்டியே கணித்துக்கூறமுடியாது. ஆனால் கிரகணம் கூடும் காலத்தை முன்கூட்டியே கூறமுடியும். பூமியின் நிழலுக்குள் சந்திரன் செல்லும்போதே சந்திரகிரகணம் ஏற்படுகிறது. கிரகணம் தோன்றும் காலத்தைக் கணிப்பதில் சிறிய நேரத்தவறுகள் ஏற்பட்டால் அதற்குக் காரணம் முன்னோர் எழுதிவைத்த சாஸ்திரங்களை அப்படியே பின்பற்றியதேயாகும். எனினும் உண்மையான சோதிடரின் கணிப்பில் எந்தவிதமான தவறும் ஏற்படமுடியாது என்று உறுதிபடக் கூறுகிறார் வராகிமிஹ்ரர்.

1825ஆம் ஆண்டு கிழக்கிந்தியக் கொம்பனியைச் சேர்ந்த லெப்ரினன்ற் கேர்ணல் ஜோன் வாரன் என்பவர் பாண்டிச்சேரியில் சேஷையா என்னும் தமிழ்ச் சோதிடர் ஒருவரைச் சந்திக்கின்றார். வெறும் சோழிகளை நிலத்தில் அடுக்கிவைத்தும் ஏதோ ஒரு வாய்ப்பாட்டை முணுமுணுத்தபடியும் ஒரு காலக்கணிதத்தைச் செய்துமுடிக்கிறார் சேஷையா. அந்த ஆண்டு மே மாதம் 31ஆம் திகதி இரவு ஒரு சந்திர கிரகணம் நிகழவிருக்கிறது என்று கூறியபடி கிரகணம் ஆரம்பிக்கும் நேரம் அது நீடிக்கும் நேரம் அது முடியும் நேரம் என்பவற்றைத் தெரிவிக்கின்றார் சோதிடர். அவர் கூறியபடியே சந்திர கிரகணம் நிகழ்கிறது. கிரகணம் ஆரம்பிக்கும் நேரம் என்று சோதிடர் குறித்துக் கொடுத்ததற்கும் கிரகணம் ஆரம்பித்த நேரத்துக்கும் 4 நிமிடங்கள் மாத்திரமே வித்தியாசம்.

இது பற்றி ஜோன் வாரன் கருத்துத் தெரிவிக்கையில் "அதிகம் படித்திராத ஒரு தமிழ்ச்சோதிடர் ஒரு சில வாக்கியங்களை மாத்திரம் பாடமாக்கி வைத்துக்கொண்டு கிரகணம் தோன்றும் காலத்தை மிகத்துல்லியமாகக் கணித்தது வியப்பானதுதான். ஆனால் அதைவிட மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் மெசப்பத்தேமியாவிலும் பின்னர் கிரேக்கத்திலும் கி.பி. ஏழாம் நூற்றாண்டில் இந்தியாவின் காலக்கணிதர் வராகிமிகிரராலும் பின்பற்றப்பட்ட அதே கணிதமுறை இன்றுவரை தொடர்ச்சியாக அறியப்பட்டும் பின்பற்றப்பட்டும் வருவதுதான் எனக்கு வியப்பை அளிக்கின்றது.

மெசப்பத்தேமியரிடமிருந்து நேரடியாகவோ பின்னர் கிரேக்க ரோம வானநூலோர் வாயிலாகவோ இந்தியர்கள் காலக்கணிதம் பற்றிய பலவிடயங்களை அறிந்திருக்கவேண்டும் என்பது ஐரோப்பிய ஆய்வாளர்கள் சிலரின் முடிபு. இல்லை ஐரோப்பியரின் தொடர்புக்கு முன்னதாகவே இந்தியர்கள் தாமாக உருவாக்கிய காலக்கணிதமே இந்திய சோதிட சாஸ்திரம் என்பது இந்திய ஆய்வாளர்கள் பலரின் முடிபு.
யாரிடம் இருந்து எவர் எதை அறிந்துகொண்டார் என்ற ஆராய்ச்சி பெரும்பாலும் உண்மையைத்தேடும் ஆய்வாக இருந்துவிடுவதில்லை. ஆய்வாளரிடையே இருக்கக்கூடிய தேசியப்பற்று, இனப்பற்று மதப்பற்று என்பன நடுநிலையான முடிபுகளை எடுக்கத்தடையாக அமைந்துவிடுகின்றன. இது இந்திய ஆய்வாளருக்கு மட்டுமின்றி ஐரோப்பிய ஆய்வாளர்க்கும் பொருந்தும்.

இந்திய வானசாஸ்திரத்தின் வளர்ச்சியில் யவனர் எனப்படும் கிரேக்கர், ரோமர் ஆகியோரின் பங்களிப்பு கணிசமான அளவில் இருந்துள்ளது என்பதை மறைப்பதற்கில்லை. இந்தியாவின் புகழ்பெற்ற வானியல் அறிஞர்களான ஆரியபட்டர், வராகிமிகிரர், பிரமகுப்தர் என்போருக்கு முற்பட்ட இந்தியக்காலக்கணித நூல்களின் பட்டியலில் யவன சித்தாந்தம், ரோமக சித்தாந்தம் என்னும் பெயர்களைத் தாங்கிய நூல்கள் இடம்பெற்றுள்ளதை அவதானிக்கலாம்.

காலக்கணிதத்துறையில் யவனரின் பங்களிப்பு குறித்து வராகிமிஹ்ரரின் கருத்தை இங்கு கவனிப்போம்.

(32ஆம் பக்கம் வருக)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



'சிந்தனைப் பூக்கள்' எஸ். பத்மநாதன்

# மனமே! நலமா?

44

மனம் நன்றாக இருந்தால் பெரிய கஷ்டங்களை தாங்கிக் கொள்ள முடியும்" என்கிறார் France Alexander என்ற அறிஞர். ஒரு மனிதன், வாழ்க்கை வட்டத்துக்கான வழியை கண்டுவிட்டால் எப்பேர்ப்பட்ட கஷ்டம் வந்தாலும் அதைச் சமாளித்து விடுவான். கஷ்டம் வரும்போதுதான் மனம் உறுதியடைகின்றது. பிறந்ததிலிருந்து நாம் சூடாகிக் கொண்டிருக்கிறோம். திடீரென்று மனம் குளிராக முடியுமா? ஆகவே தீவிரமான முயற்சி தேவை.

எதுவும் சரிப்படாது என்று மனம் வேதனை அடைகிறது. மனம், படைக்கும் தன்மையை இழந்து விடுகிறது. பலம் போய் பலவீனம் வருகிறது. நெஞ்சம் சிதையாமல் இருக்க வேண்டும். உண்மையை நோக்கி நகர வேண்டும். அமைதிதான் மனத்தின் பலம். பல கோணங்களில் ஆராய்ந்து மண்டையை பிய்த்துக் கொண்டால் தீர்வு கிடைக்காது. ஆத்மா வந்து நம்மையடையும்போது உண்மையான சக்தி அங்கே இருக்கிறது. செடி தானாகப் பூப்பதுபோல் மனம் கனிந்தால் அது ஆத்மா. கவனம் சிதறாமல் இருந்தாலே வேலை எல்லாம் தானாகவே நடக்கும். எமது செயற்றிறன் வேலை செய்கிறது. இடையே நில்லாமல் எல்லாம் நல்லபடி நடக்கிறது. இது கனவல்ல நிஜம். செயற்பாடு என்பது தாவிக்குதிப்பதல்ல. உண்மையும் நேர்மையும் இருந்தால் செயல் சரியாக செயற்படும். இதைப் புரிந்து கொள்ள வேண்டும். பிறகு அமைதியும் செயலும் ஒன்றாகிவிடும்.

மனம் சந்தோஷமாக இருந்தால்தான் செயற்பட முடியும். சந்தோஷம் வருவதற்கு ஒருமுகப்படுத்தல் தேவை. தேவையற்ற யோசனைகள் மனஉளைச்சலை ஏற்படுத்தும். எதிர்மறை உணர்ச்சிகள் வரும்போது இளைப்பாற வேண்டும். அது போகவே போகாது என்பது பலருடைய பயம். முதலில் பயத்தினைப் போக்கிவிட்டு தியானத்தில் ஈடுபடலாம். படைப்பின் சக்தி எல்லாவற்றையும் சீராக்கி, எளிதாக்கிவிடும் என்ற நம்பிக்கை வேண்டும். மனஉளைச்சல் இருந்திருந்தால் ஷேக்ஸ்பியரால் 37 நாடகங்களை எழுதி முடித்திருக்க முடியாது!

அனுகூலமான அனுபவங்களால் மனம் அமைதி பெறுகிறது. அதனாற்றான் எதிர்மறை அனுபவங்களை தவிர்க்க வேண்டும். நண்பர்கள், உறவினர்கள் மூலம் மனத்தை அமைதிப்படுத்த முடியும். புதுமையை எப்போதும் நாடுவது மிகவும் தேவையாகிறது. பழைய செயற்பாடுகளும் சிந்தனைகளும் மனிதர்களுக்கு அலுப்புத் தருகிறது. எனவேதான் புதுமையை நாடுவது ஆனந்தமளிக்கிறது. வானவில்லைப் பார்ப்பது வேறு. அதிலுள்ள நிறங்களையும், அது அமைந்துள்ள புதுமையையும் ரசிப்பது வேறு. சுயமான சிந்தனையின்போது மனம் அடித்தளத்தை அடைகிறது. இதுவே எல்லாவற்றிற்கும் மூலம். இருக்கையின் உணர்வு அங்கே உருவாகிறது. மனம் இப்போது வாழ்கிறது. கடந்த காலத்தையும் எதிர்காலத்தையும் உள்வாங்கி நிகழ்வாகிறது; எல்லாம் புனிதமாகிறது.
புதுமையை நாடுபவர்களுடைய மனம் எப்போதும் மலர்ந்து கொண்டேயிருக்கும்'

மீண்டும் சந்திப்பேன்...●

## வரலாற்றுப் பெருமைமிக்க நல்லூர் கோவில் வருடாந்த உற்சவம்



தமிழீழத்தின் வரலாற்றுப் பெருமைமிக்க நல்லூர் கந்தசுவாமி கோவில் வருடாந்த உற்சவம் இந்த மாதம் முதலாம் திகதி இடம்பெற்ற கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. இந்த மாதம் 24ம் திகதி ஞாயிற்றுக்கிழமை தேர்த் திருவிழாவும், 25ம் திகதி தீர்த்தத் திருவிழாவும், 26ம் திகதி பூங்காவனமும் நடைபெறும். ஆலயம் வரும் அடியார்களை தமிழர் பண்பாட்டு உடைகளை அணிந்து வருமாறும், தங்க நகைகளை அணிவதைத் தவிர்க்குமாறும் யாழ். மாநகர நிர்வாகம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

## உலக சனத்தொகை 7.2 பில்லியன்

உலக சனத்தொகை 7.5 பில்லியனை எட்டியுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. 1950ல் 2.5 பில்லியனாகவிருந்த சனத்தொகை, 200ல் ஆறு பில்லியனாக அதிகரித்தது. சனத்தொகை 7.2 பில்லியனின் அறுபது வீதமானது ஆசிய நாட்டு மக்களைக் கொண்டுள்ளது. உலக சனத்தொகையில் 37 வீதம் இந்திய மற்றும் சீன மக்களைக் கொண்டது. உலக சனத்தொகையானது 2010ல் 8 பில்லியன் ஆகலாமென்றும், 2040ல் 9 பில்லியன் ஆகலாமென்றும் எதிர்வு கூறப்படுகின்றது.

## 2.1 மில்லியன் மக்கள்; 2.2 மில்லியன் தொலைபேசி

இலங்கையின் தற்போதைய சனத்தொகை 2.1 மில்லியன் (இரண்டு கோடி பத்து லட்சம்). ஆனால் இங்கு தற்சமயம் பாவனையிலுள்ள தொலைபேசிகளின் எண்ணிக்கை 2.2 மில்லியன் (இரண்டு கோடி இருபது லட்சம்) அதாவது, சனத்தொகையிலும் பார்க்க பத்து லட்சம் அதிகமாகவுள்ளன. சிலரிடம் 'டபிள்' இருப்பதுவே இதற்கான காரணமென்று கூறப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கனகேஸ்வரி நடராஜா

# நளபாகம் - Cooking

நளபாகம் என்றால் சமையற்கலை என்பது கருத்தாகும். நளமகாராஜன் சமையல் கலையில் விற்பன்னராகத் திகழ்ந்ததால் சமையற்கலையை நளபாகம் என அழைத்தனர். நளமகாராஜனால் நெருப்பு இல்லாமலும், நீர் இல்லாமலும் சமைக்க முடியுமாம். (இன்றைய இளம் தலைமுறையினர், ஏன் பெரியவர்கள் கூட நெருப்பும் நீரும் இல்லாமல் விதம், விதமான சலாடுகளை (Salads) செய்து தமது பிரதான உணவாகக் கொள்கிறார்கள்).

அண்மையில் எனது நெருங்கிய உறவினர் ஒருவரின் மகனுக்கு அமெரிக்காவில் திருமணம் நடந்தது. மணமகன் அமெரிக்காவிலேயே பிறந்து வளர்ந்த பிள்ளை. மணமகள் சுவீடன் தேசத்தைச் சார்ந்தவர். இத் திருமணம் ஹவாய் தீவின் கடற்கரையில் நடைபெறும் எனத் திருமண அழைப்பிதழில் குறிக்கப்பட்டிருந்தது. இது சம்பந்தமாகப் பையனின் தந்தையை தொலைபேசியில் அழைத்தபொழுது மகன் என்ன தொழில் செய்வதாகக் கேட்டேன். அவர் ஒரு ஐந்து நட்சத்திர ஹோட்டலில் பிரதான சமையல்காரராக (Head chef) இருப்பதாகவும், மணப் பெண்ணும் சமையற்கலைப் பயிற்சியில் ஈடுபட்டுள்ளதாகவும் கூறினார். வட அமெரிக்காவிலேயே பிறந்து வளர்ந்த பிள்ளை, அத்தோடு தந்தையும், தாயும் உயர்ந்த கல்வித் தகைமைகளைக் கொண்டவர்கள். இருந்தபொழுதும் ஏன் இந்தப் பையன் போயும் போயும் சமையற்கலையைப் பயின்றார் என்பதை என்னால் ஜீரணிக்க முடியவில்லை.

ஹவாய் தீவுக்குச் சென்று, ஒரு ஹோட்டலில் தங்கி பின் காரில் கடற்கரைக்குச் சென்று இரவு முழுவதும் கலியாண கேளிக்கைகளில் பங்குபற்றி விட்டு பின் விடியற்காலை ஹோட்டலுக்குச் சென்று திரும்பவும் விமானம் ஏறி இங்கு வந்து சேர்வதெல்லாம் என்னால் முடியாத காரியம் எனக்கூறி கலியாண வீட்டிற்கு வரமுடியாது என தாழ்மையாகக் கூறிவிட்டேன். ஆனால் எனது தம்பியும், மனைவியும் சென்றார்கள். அவர்கள் வந்து கலியாண வீட்டுப் புதினங்களைக் கூறிய பொழுது மிகவும் விசித்திரமாக இருந்தது. ஹவாய் தீவுக் கடற்கரையில் சிறு, சிறு கூடாரங்களை அமைத்து இவரோடு Chef training முடித்த 6 நெருங்கிய நண்பர்கள் தங்களின் மிகவும் விருப்பமான (Favorite Receipes) உணவு வகையை சமைத்தார்கள் என்றும், விருந்தினர்கள் ஒவ்வொரு கூடாரமாகச் சென்று விரும்பிய உணவு வகைகளை, விரும்பிய மட்டும் சாப்பிட்டார்கள் என்று கலியாண வீட்டுக்காரருக்கு உணவு வழங்கும் வேலை இருக்கவில்லை என்று சொன்னார்கள். தாங்கள் ருசி பார்த்த உணவு வகைகளை முன்பு ஒருபோதும் தாங்கள் உண்ணவில்லை என்றனர். இந்த நண்பர்கள் 5 நட்சத்திர ஹோட்டல், பெரிய உல்லாசக் கப்பல், பெரிய உணவு விடுதிகள், சொந்த ஹோட்டல்களில் வேலை செய்வதாகவும், இவர்களின் வருடாந்த வருமானம் 'லகர' டாலர்களில் இருப்பதாகவும் அறிந்தேன். வீட்டு அடுப்பங்கரையோடு அடைபட்டுக் கிடந்த சமையற்கலையின் பரிணாம வளர்ச்சியையே இந்தக் கலியாண வீட்டு சமையல் எமக்கு எடுத்து இயம்புகிறது.

மனிதன் நெருப்பை என்று கண்டு பிடித்தானோ, அன்றே சமையல் ஆரம்பித்துவிட்டது. பொதுவாக சமையல் என்பது நாம் வாழும் பிரதேசத்தில் என்ன உணவுப் பண்டங்கள் கிடைக்கின்றனவோ அவற்றை வைத்தே விதம் விதமாகச் சமைத்தோம். நான் சிறுபிள்ளையாக இருந்தபொழுது காலை 5 மணிக்கு மூட்டிய விறகு அடுப்பு இரவு 9 மணிவரை தணல் விட்டபடி இருக்கும். அடுத்தநாள் விடியற்காலையில் அடுப்புச் சாம்பலை அள்ளும்போது முழுதாக அதன் சூடு ஆறி இருக்காது. அக்காலத்து அம்மாக்கள் கணவனுக்கு, பிள்ளைகளுக்கு, வயது முதிர்ந்த பெற்றோருக்கு என வகைவகையாகச் சமைத்துப் போடுவதிலேயே இன்பம் கண்டனர். 'கண் பார்த்தது கை செய்யும் என்பார்கள். பெண்பிள்ளைகள் தாய்மாருக்கு உதவி செய்யும்பொழுது சிறுவயதிலேயே சமையலைப் பழகி விடுவார்கள். விருந்தோம்பல் என்பது இல் வாழ்க்கையின் ஒரு முக்கிய அம்சமாகக் கருதப்பட்டது. எந்த நேரத்தில் வீட்டிற்கு யார் வந்தாலும் அது சிலவேளை அர்த்தசாமமாகக் கூட இருக்கலாம் - சுடச்சுட உணவு படைப்பதை ஒரு கட்டாயக் கடமையாகக் கருதினார்கள். வீட்டிற்கு வருபவர்களை ஹோட்டல்களில் சாப்பிட அனுமதிப்பதை ஒரு அவமானமாகவே கருதினார்கள்.

இன்று வாழ்க்கை முறை முற்றிலும் மாறிவிட்டது. பெண்களும் வேலைக்குப் போக வேண்டிய கட்டாயம் ஏற்பட்ட பின்பு வீடுகளில் சமையல் மிகவும் குறைந்துவிட்டது. தூரப் பயணங்கள் சர்வ சாதாரணமாகி விட்டன. முழத்துக்கு முழம் உணவு வழங்கும் கடைகள், அங்காடிகள் வீட்டில் உள்ளவர்களை விருந்தாளிகள் வந்து தொந்தரவு செய்யாதவாறு உதவுகின்றன. வீடுகளிலும் திடீர் திடீர் எனச் சமைத்து வழங்கக்கூடிய பல உணவு வகைகள் இருப்பில் இருப்பதால் அவற்றைத் தயாரிப்பது பெரிய கஷ்டமான விடயமாக இல்லை.

வீட்டில் இருந்தபடியே வகை வகையான உணவு வகைகளைச் சமைக்கும் முறைகளை எமக்கு ஊடகங்கள் வழங்குகின்றன. மிகவும் இலகுவாக கணினி மையங்களுக்குச் சென்று ஆண்கள், பெண்கள் மாத்திரமல்ல சிறுபிள்ளைகள் கூட பல்விதமான உணவு வகைகளைச் சமைக்கும் பாங்குகளை அறிய முடிகிறது. அதிகமான தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் உணவு தயாரிக்கும் முறைகள் ஒரு முக்கிய அம்சமாக விளங்குவதோடு மாத்திரமல்லாது விறுவிறுப்பான சமையல் போட்டிகளை அன்றாடம் பார்த்து மகிழ்கிறோம். இதனால் சமையல் என்பது ரசித்து அனுபவிக்கக்கூடிய ஒரு கலையாகப் பரிணமித்துள்ளது. இன்று சமையல் அறையில் காணப்படும் நவீன உபகரணங்களும் சுத்தமான உணவுப் பதார்த்தங்களும் பெண்கள் மாத்திரமன்றி ஆண்கள்கூட இலகுவாகச் சமைக்க உதவுகின்றன. இதனால் அடுப்பங்கரையில் பெண்கள் அரசோச்சிய காலம் மறைந்துவிட்டது.

எமது தலைமுறையினர் புலம்பெயர்ந்த காரணத்தினால் எவ்வளவோ நாட்டுச் சமையல்களை அறியக் கூடியதாக உள்ளது. எம்மவர்கள் பலர் எங்கள் நாட்டு உணவுக் கடைகளை நடத்துவதோடு மாத்திரம் நின்றுவிடாது பல்வேறு நாட்டு உணவு வகைகளை தயாரிக்கும் கடைகளை நடத்துவதைப் பார்க்கும்போது எம்மவரின் முயற்சியை மெச்ச வேண்டியுள்ளது.

எமது இளம் சந்ததியினர் தங்கள் சுகத்திலும், உடல்வாகுவிலும், உடல் அழகிலும் அதிகம் கவனம் செலுத்த ஆரம்பித்துள்ளனர். இதனால் பலவகையான உணவு வகைகளைத் தெரிவு செய்து தாமே சமைத்து உண்கிறார்கள். இது வரவேற்கப்பட வேண்டிய ஒரு விடயமாகும். அதே சமயத்தில் எமது உணவுகளை தயாரித்து விற்பனை செய்யும் சாப்பாட்டுக் கடைகள் பல இடங்களிலும் காணப்படுகின்றன. அத்துடன் விலையும் மலிவாக இருப்பதால் எம்மவரில் பலர் சோம்பேறிகளாக மாறிவிட்டனர். கடைச் சாப்பாட்டை நம்பி வாழும் பழக்கம் அதிக வீடுகளில் காணப்படுகிறது. இந்நிலை மாறவேண்டும். சமைத்துப் பார்' என நாம் அறைகூவும் காலம் வெகு தூரத்தில் இல்லை.●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எஸ். ஜெகதீசனின் பத்தாம் பக்கம்

# பயணிகள் கவனத்திற்கு...

எந்த நாட்டுக்குப் பயணிக்கப் போகின்றோம் என தீர்மானிக்க முடிந்த எங்களால் எந்த நாட்டு வானூர்தியில் பயணிக்கப் போகின்றோம் என இதுவரை தீர்மானிக்க முடியாதிருந்தது. எயார் கனடா எமது விருப்பமாக இருந்திருக்கும். மத்திய கிழக்கு நாடொன்றின் பயணசீட்டு மலிவு என்ற பெயரில் எமது கைக்குள் திணிக்கப்பட்டிருக்கும். எந்த நாட்டு விமானம் என்பதை மட்டுமல்ல அந்த விமானத்தின் எந்த இலக்க இருக்கை என்பதைக் கூட எமது தீர்மானத்துக்கு உள்ளாக்குகின்றது இணையம்.

எமது உத்தேச பயண திகதியில் எத்தனை விமானங்கள் புறப்படுகின்றன, அவை இடையில் எங்கெங்கு தரிக்கின்றன, எமக்கான ஆசனம் ஜன்னலோரமா அல்லது நடுவிலா மற்றும் சைவ, அசைவ, ஹலால் உணவு விருப்புகள், முதியோருக்கான சக்கர நாற்காலி, பாலகருக்கான முன்னிருக்கை போன்ற பிற பல தேவைகளின் முன் பதிவு, முன்னுக்கிருந்தால் விபத்தில் பொட்டென்று போய்விடுவோம் என பயந்தவருக்கான பின்னிருக்கைத் தெரிவு, சிறப்பு வகுப்புக்கும் சிக்கன வகுப்புக்கும் உள்ள கட்டண வேறுபாடு, கைப்பையில் காவும் பொருட்களின் விபரம் போன்ற பலதையும் கணினியில் பறக்க முன்பே பார்வையிடலாம்.

ஒரு வரிசையில் ஆறு இருக்கைகளும் நடுவில் நடை பாதையும் உள்ள சிறிய ரக விமானங்கள் பல நாடுகளில் உள்ளூர் விமான சேவையில் ஈடுபடும். ஏழு முதல் பதினான்கு இருக்கைகள் ஒரே வரிசையில் உள்ள மத்திய பெரிய ரக விமானங்கள் இரு நடைபாதைகளுடன் சர்வதேச சேவையில் ஈடுபடுகின்றன. 50 பயண ஆசனங்களுக்கு ஒரு கழிவறை இருத்தல் அவசியம் என்பது பொது விதி.

சர்வதேச விமானிகள் எல்லோரும் சரளமாக ஆங்கிலத்தில் உரையாடும் தேர்ச்சி உடையவர்களாக இருப்பார்கள். 8 மணி நேர பயணம் எனின் மூன்று விமானிகளும் 12 மணி நேர பயணம் எனின் நான்கு விமானிகளும் கடமையில் அமர்த்தப்படுவர். பொதுவாக 3 அல்லது 4 மணி நேரம் ஒரு விமானி பணி புரிவார். முன் எச்சரிக்கை நடவடிக்கையாகவும் பாதுகாப்பு காரணங்களுக்காகவும் கடமையில் உள்ள விமானிகள் ஒரே விதமான உணவை உட்கொள்வதைத் தவிர்த்துக் கொள்வர். பெரிய நிறுவனத்து விமானி நிபுணராக இருப்பார் என்ற எமது எதிர்பார்ப்பும் கடமையின் பொழுது கண்ணயர மாட்டார் என்ற எமது நம்பிக்கையும் பொய்த்துப் போகவும் வாய்புகளுண்டு. செல்லிடப்பேசி போன்ற மின்னணுச் சாதனங்களை பயணிகள் பாவிப்பதால் விமானி சமிஞ்ஞைகளை பெறுவதில் தடங்கல் ஏற்படும் என்பதால் தவிர்க்கச் சொல்வார்கள். சௌகரியங்களுக்கும் மேலாக பயணிகளின் பாதுகாப்புக்கு முன்னுரிமை வழங்கும் வகையில் பணிப்பெண்கள் பயின்றிருப்பர். 50 பயணிகளுக்கு ஒரு பணிப்பெண் என்ற ரீதியில் கடமையில் இருப்பர்.

பயண ஆரம்பத்தில் பணிப்பெண்கள் ஆபத்து கால நடவடிக்கைகள் பற்றி அபிநயத்துடன் விளங்கப்படுத்துவார்கள். அவ் விளக்கங்கள் ஆசனத்துக்கு முன்பாகவுள்ள பைக்குள்ளும் வைக்கப்பட்டிருக்கும். வாந்தி சேகரிக்கும் பையும் (sick sack) அதே பைக்குள்ளிருந்து அவசரத்துக்கு உதவும். ஒவ்வொரு ஆசனத்துக்கும் முன்பாகவுள்ள குட்டித்திரையை இயக்குவதன் மூலம் விமானத்தின் வேகம், பறக்கும் உயரம், பறக்க வேண்டிய தூரமும் நேரமும், விமானத்தின் பாதை போன்ற பல விபரங்களை பயணிகள் அறியலாம். அத்துடன் ஆசனப்பட்டி அணிதல் வேண்டும், புகைப் பிடிக்கத் தடை போன்ற எச்சரிக்கைகளும் தோன்றுமதில், திரைப்படங்களையும் பார்க்கலாம். தமிழ் படங்களையும் சொர்க்கத்துக்குப் பக்கத்தில் பார்த்துப் பிரமிப்படையலாம். ஒவ்வொரு ஆசனத்துக்கும் நேரே மேலே எமக்கு மட்டும் பயன்படக் கூடிய வெளிச்சம் மற்றும் காற்று உமிழும் சாதனங்கள் பொருத்தப்பட்டிருக்கும். கைப்பையை (அளவு:56 செ.மீஜ 45.செ.மீஜ 25செ.மீ-நிறை:23 கிலோ.) மேற்பகுதியில் உள்ள பெட்டியில் அல்லது ஆசனத்தின் கீழே வைக்கலாம். விமான பணிப் பெண்ணின் சேவை தேவை என்றாலும் அழைப்பதற்கு ஆசனத்துக்கருகே ஆழி உண்டு.

உங்கள் முகத்துக்கு முன்பாக பிராணவாயு கொண்ட முகமூடி தோன்றினால் அதனை தாமதமின்றி அணிந்துகொள்ளுங்கள். ஆபத்துதவியாக 15 நிமிடங்களுக்கு மட்டும் அது தாக்குப்பிடிக்கும் என்பது முகமூடி' ரகசியம். அதற்குள் விமானம்காற்று மண்டலத்துள் இறங்கிவிடும். போத்தலில் வழங்கப்படும் தண்ணீர் மட்டுமே குடிப்பதற்கு உகந்தது. கழி-வறைத் தண்ணீரில் ஒட்டுண்ணி இருக்க வாய்ப்புண்டு. போர்வை, தலையணை, கேட்கும் கருவி போன்றன கழுவி காயவிட்டிருப்பதற்கு உத்தரவாதமில்லை. மூடப்பட்ட போர்வைக்குள் முன்பிருந்தவர் குடித்தனம் நடத்தியிருந்தாலும் அழகாக மீண்டும் அவை புதிய பைகளில் செருகப்பட்டிருக்கலாம். உணவு வைக்கும் மடிக்கக்கூடிய மேஜை கூட துப்பரவானது அல்ல. அதன் மீது முன்னையவர் தவறுதலாக சிந்திவிட்டுச் சென்ற மூக்கும் நன்கு காய்ந்து உங்கள் நோய் எதிர்ப்பு சக்தியை பரிசோதிக்க காத்திருக்கக் கூடும். கத்தி, கரண்டி என்பன நெகிழியாக (plastic) இருப்பினும் நன்கு சுத்திகரிக்கப்பட்டு மீள் பாவனைக்கு வருவதுதான் விமானத்தில் வழமை!

ஒரு கை வலுவிழந்தோர் முள்ளுகரண்டியும் கத்தியும் இணைந்த உபகரணத்தையோ (knork), அல்லது கரண்டியும் முள்ளுகரண்டியும் சேர்ந்த உபகரணத்தையோ (spork) பணிப்பெண்கள் மூலம் இலவசமாகப் பெற்று சங்கடம் தீர்த்துக் கொள்ளலாம். அணையாடை (diaper) என குழந்தைகளுடனும், அந்த நாள் அச்சம் தவிர்க்கும் தூய்மைத் துணியாக (sanitary napkin) மகளிருடனும் ஒட்டிக்கொள்ளும் இலவசங்களும் உண்டு.

விமானத்துள் வரிவிலக்கு விலையில் வாங்கக் கூடியவற்றின் விலைப்பட்டியலை பணிப் பெண்களிடம் கேட்டு வாங்கிக்கொள்ளலாம்.

bloody mary/வான் வாருணி என்ற பெயர் உள்ள ஒரு மதுசாரக்கலவை (cocktail) உண்டு. விமானத்துள் ஏற்படும் அழுத்தம் நாக்கின் சுவை அரும்புகளையும் ஸ்தம்பிதமடைய வைப்பதால் உண்ணும் உணவில் உப்பு குறைவு போன்ற உணர்வு ஏற்படுவதை நிவர்த்தி செய்வதுடன் ஆயாசம் நீக்குமாம் இந்தப் பானம். இதில், வொட்கா என்ற மதுபானம், தக்காளிச்சாறு, உப்பு, மிளகு, எலுமிச்சை போன்ற பல அடர்த்தியாக கலந்திருக்கும். உப்புச்சுவையும் புளிப்புச்சுவையும் மிகுந்திருக்கும்.

நீண்ட தூர பயணத்தால் கால்கள் வீங்குவது சர்வ சாதாரணம். அவ்வப்பொழுது கால்களை நீட்டி மடக்குவதாலும் இடைக்கிடை எழுந்து நடை பாதையில் நடப்பதாலும் கால்களுக்கு இரத்த ஓட்டம் சீர்படுத்தப்படும். கால்களின் தசைகள் வலுவடையும். விமானம் புறப்படும் பொழுதும் தரை இறங்கும் பொழுதும் ஏற்படும் வெளி ஆழுத்தம் காரணமாக காதுகள் அடைப்பது போன்ற உணர்வு தோன்றும். அப்பொழுது உமிழ்நீரை விழுங்குவதால் நிவாரணம் பெறலாம் என்பார்கள் அனுபவஸ்தர்.

பணிப்பெண்கள் முதன்முதலாக பானம் வழங்கும் பொழுது சிறு உபகாரம் (tips) செய்பவர்களுக்கு அடுத்த தடவை கரிசனம் கூடும் என்ற அபிப்பிராயம் இருப்பினும் பயணிகள் அதனை வழங்குவதுமில்லை. பணிப்பெண்கள் அதனை ஏற்பதுமில்லை.

ஆகஸ்ட் 19 விமான பயணிகள் நாளாம். ஆனால் அது எவர் மனதிலும் சிறகு விரிப்பதாகத் தெரியவில்லை! ●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொன்னையா விவேகானந்தன்



# பனி முகிலிடமா முறையிட்டழுவேன்?

17

அகதியாய் வாழ நிர்ப்பந்திக்கப்பட்ட
ஒரு நாட்டின் பட்டணமொன்றில்,
கையிற் குழந்தையோடு வரிசையில்
நிற்கின்றார் ஓர் அகதித் தந்தை.
சிணுங்கிச் சினக்கும்
பிள்ளை'குளிருது வாங்கப்பா வீட்டை போவம்' என்கிறது.
குழந்தையைச் சமாளிக்கத் தந்தை கதை சொல்கின்றார்.
ஊரைத் துறந்த அப்பாவாம்
தூரதேசம் வந்தாராம்
வேரைத் தேடித் தவித்தாராம்
யாரை நொந்து கொள்வாராம்

அப்பா என்ர அப்பாவாம்
அப்பா அம்மா செல்லமாம்
இப்போ நாங்க வந்தோமாம்
எப்போ வீட்ட போவோமாம்

அமைதி காணாது போனதாம்
அகதி நாங்களும் ஆனோமாம்
இனிமே போகவும் ஏலாதாம்
இங்கே கதையும் முடிந்ததாம்

பிள்ளை தொடர்ந்தது,

இல்லை இல்லை இல்லையாம்
இன்னும் கதை வேணுமாம்
ஒன்றாய் வீட்ட போவோமாம்
அப்பா என்ர செல்லமாம்

...........

நிரையோ மெல்ல ஊர்கின்றது
இரைச்சல் காதைப் பிளக்கின்றது.
குழந்தை தோளில் சரிகின்றது
நெஞ்சுக்குள் ஏதோ குமைகின்றது
நீங்கள் அகதியானது உங்களுக்குச் சரி
என்னை ஏன் அகதியாக்கி அலைச்சலாக்கி..."
கனவின் மீதி கி.பி. அரவிந்தன்

தன் மனச்சுமைகளோடு தந்தையாகிக் குழந்தையையும் தோளிற் சுமந்து நிற்கின்ற ஓர் அகதித் தமிழனின் மனவுணர்வுகளின் வெளிப்பாடாகின்றது இக்கவிதை. பிள்ளைக்குக் கதை சொல்லும் போதும் ஊரைத் தொலைத்ததுவும் வேரைத் தேடுவதுவுமே கருப்பொருளாகிவிடுகின்றது. கதையின் கருப்பொருள் தந்தையின் சுமையாகவும், கதையின் தாளலயம் குழந்தைக்குச் சுவையாகவும் அமையத் துயரத் தோற்றங்கொள்கின்றது இக்கவிதை.

ஆனாலும் பாருங்கள், கவிதையின் கடைசி வரி அகதி இருப்பின் ஆன்மாவைச் சுட்டுவிடுகின்றது.
அகதியான பெற்றோருக்குப் பிள்ளைகளாகப் பிறந்ததால் அன்றாட வாழ்வில் அவர்களும் அல்லல்களைச் சந்தித்தேயிருக்கின்றனர்.
பிறப்போடு கூடிய சிறுவயது வாழ்வுக்களமானது உணர்வெங்கும் ஊறிக்கிடப்பது மானுடத்தின் தன்மை. தாய் கட்டிய கூட்டில் வாழக் கற்றுக்கொண்ட குஞ்சுகளால் பிறர் கட்டிய கூண்டுக்குள் வாழமுடியாதிருப்பது இயல்பே.

நம்மவரையும் புலவாழ்வு பல சிறைகளுக்குள்
கட்டிப்போட்டிருந்தது.
என்னைப் பிரிந்த எனது தேசவனப்பும்
வனப்பின் எழிலுஞ்சிறப்பும்
காதல் கொண்ட கடலுங்கரையும்
எல்லாம் எனக்கு மீளவேண்டும்

.............

யாரிடம் சென்று விண்ணப்பம் செய்வேன்
பனிமலைச் சுவரில் பட்டியல் எழுதி
பனி முகிலிடமா முறையிட்டழுவேன்....." *புலம்பெயரந்தோர் கவிதைகள் பக் 68*

தமயந்தியின் இக்கவிதை உணர்வோடு இறுகப் பிணைந்து கிடக்கும் தாயக ஊரின் பேரழகைப் பிரிவுற்ற துயரத்தை வெளியிடுகின்றது. இதிற் பெரும் அவலம் பிரிவுற்ற அவ்வழகை மீளச் சென்றடைய வழியேதும் இல்லாதிருப்பதுதான்.
பனிமலையும் பனிமுகிலும் 'காதல் கொண்ட கடலுங்கரையுமாகி நின்ற எம்மண் அழகுக்கு நிகராகுமா?

எல்லா நிலைகளிலும் உயிர்ப்போடிருந்த தேசத்தை நாம் இழந்து வந்திருப்பதாகச் செல்வம் அருளானந்தம் குறிப்பிடுகின்றார்.

மனிதர்கள்,
எங்கும் முகங்கள்,
கடைகளாக,
தெருக்களாக,
பட்டணம் வாழ்வு கொண்டிருக்கின்றது.

எல்லோருக்கும்
காரியங்கள் இருந்தன
சீவியத்தின்
சந்தோசம் தெரிந்தன
குடிகாரராய், பிச்சைக்காரராய்
பைத்தியக்காரராய்
உயிரோட்டம் இருந்தது.
இந்த தேசத்தில்
நாங்களோ
கடிதங்களில் வாழும் மனிதரானோம்."
தாயகத்தில் பானைகள் வெறுமைகளாக இருந்தாலும் இதயங்கள் யாவும் நிறைந்தே இருந்தன. அழகியலால் நிறைந்திருந்த அவ்வாழ்வு புல தேசங்களில் வெறுமையாகிப் போக, அவலங்களே அவற்றை நிறைத்துக் கொண்டன.●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*எம்மைச் சுற்றி நடப்பவைகளிலிருந்து பொறுக்கி எடுக்கப்பட்ட சில சம்பவங்களைக் காய்தல் உவத்தலின்றி எழுதும் இந்தப் பத்தி (column). அவ்வப்போது வெளிவரும். கண்டவை, கேட்டவை, நடந்தவையே இதன் மூலாதாரம். ஒருவகையில் பார்த்தால் இதுவும்கூட தகவல்தான்.*

# இது எப்பிடி இருக்கு?

## நூல் வெளியீடுகளில் வாரி வழங்கும் பாரிகள்

ரொறன்ரோவில் நடைபெறும் வெளியீட்டு விழாக்களில் இப்போது பங்குபற்றுபவர்கள் முன்னரைப்போல அல்ல. ஓரளவுக்கு மண்டபம் நிரம்பி விடுகிறது எனலாம்.

உரைகள் முடிந்த பின்னர் நூல் பிரதியை அதன் ஆசிரியரிடமிருந்து நேரடியாகப் பெறுவதற்கு நீண்ட வரிசையில் நிற்பவர்களைப் பார்க்கையில் மனம் மகிழ்வடைகின்றது.

இது தொடர்பாக அண்மையில் வெளியீட்டு விழா கண்ட ஓர் அன்பர் தெரிவித்த விபரத்தை கீழே படியுங்கள்:

"சுமார் 200 பேர் வரையில் வருகை தந்திருந்தார்கள். பெரும்பாலானவர்களும் நேரில் வந்து 'என்வலப்' தந்து பிரதியை (சிலர் இரு பிரதிகளை) பெற்றனர்.

வீடு சென்று என்வலப்பைப் பிரித்த போது 75 வீதமானவைகளும் 10 டாலர்களுக்குக் குறைவாக இருந்தன. சிலர் இரண்டு டாலர்களை வைத்திருந்தனர். அங்கு வழங்கப்பட்ட சிற்றுண்டிச் செலவே இதனிலும் அதிகமானது!" சில நேரங்களில் சில மனிதர்கள்!

## ஒரு கோமாளியின் தோட்டத்து வெருளிகள்!

குதர்க்கத்தின் மறுபெயர் என்னவென்று இந்தியாவில் யாரிடம் கேட்டாலும் உடன் வரும் பதில், சுப்பிரமணிய சுவாமி என்பது.

அனேகமான ஊடகங்களும் இவரை 'ஜோக்கர்' என்றே வர்ணிப்பது வழக்கம்.

கடந்த மாதம் தமது அருமை நண்பரைச் சந்திக்க இவர் கொழும்புக்குப் போனார். விருந்துகள், கொண்டாட்டங்கள் என்று எல்லாமே மகிந்த சிந்தனையில் வைரம் ஜொலிக்கும் ஜோராக நிகழ்ந்தன.

தம்மை மகிழ்வித்து அன்பளிப்பு வழங்கிய நண்பரை மகிழ்விக்க வேண்டுமல்லவா? அதற்காக ஜெனிவா மனித உரிமை ஆணையாளர்களைப் பார்த்து பின்வருமாறு சொன்னார் இந்த ஜோக்கர்:

"ஐ. நா. அதிகாரிகள் தோட்டங்களில் நிறுத்தப்பட்டுள்ள வெருளிகள்" என்று இவர் சொன்னதால், மகிந்தவின் நெஞ்சு உண்மையாகக் குளிர்ந்திருக்கும்!

## சாணக்கியமான 'வெட்டு' என்பது இது தானோ!

கலைஞருக்கும் கவிஞருக்குமிடையில் முப்பது வயது வித்தியாசமென்றாலும், அவர்களுக்கிடையில் தனித்துவ நல்லுறவு நீண்ட காலமாக இழையோடி வருகிறது.

இருவரும் ஒருவரையொருவர் என்றும் விட்டுக் கொடுப்பதில்லை. இவர்களின் பிறந்தநாள் நிகழ்வுகளில் இவர்களை இரட்டையர்களாகவே பார்க்க முடியும்.

ஆனால், ஜுலை 13ம் திகதி நடைபெற்ற கவிஞரின் அறுபதாவது பிறந்தநாள் விழாவில் கலைஞர் 'மிஸ்ஸிங்'.

"மணிவிழா கோவையில் நடைபெறுவதால் இவ்வளவு தூரம் உங்களைத் தொந்தரவு செய்ய விருப்பவில்லை. உங்கள் வாழ்த்து எனக்கு எப்போதும் உண்டுதானே!" என்று பவ்வியமாகக் கலைஞரிடம் கூறி, அவரை மெதுவாக வெட்டி விட்டாராம் கவிஞர்.

மோடி, ஜெயலலிதா ஆகியோரின் எதிர்ப்பைச் சம்பாதிக்க விரும்பாத வைரமுத்தரின் முடிவு இது என்கிறார்கள் தி. மு. க வட்டாரத்தினர்.

சாணக்கியர் யார் - கலைஞரா? கவிஞரா?

## இது கொஞ்சம் வித்தியாசமான நாய்க் கதை

இது ஒரு வீட்டு நாய். இரவு பகலென்று இல்லாமல் எப்போதும் குரைத்துக் கொண்டே இருக்குமாம்.

இதனால் தம்மால் நிம்மதியாக இருக்க முடியவில்லை; இரவில் தூங்கவும் முடியவில்லை என்று கூறி பக்கத்து வீட்டுக்காரர் பொலிசில் புகார் செய்தார்.

பொலிஸ் விசாரணையின்போது, "நாய் குரைப்பது இயற்கை. குரைக்க வேண்டாமென எப்படி அதனிடம் நான் சொல்ல முடியும்" என்று பதிலளித்தார் நாயின் உரிமையாளர். இதனை ஏற்காத பொலிசார் நாயை ஒரு மாதத்துள் விற்று விடவேண்டுமென்று பணித்துள்ளனர்.

இது நடைபெற்றது யாழ்ப்பாண நகரில். நாய்க்கு எதிராக முறைப்பாடு செய்தவர் அங்கு பொறியியலாளராகப் பணி புரியும் வாடகைக் குடியிருப்பாளரான ஓர் அமெரிக்கப் பிரஜை.

## நீ போகும் இடமெல்லாம் நாமும் வருவோம் வா..வா..

உலகிலேயே மிகப் பிரபல்யமான மேயராக இன்று விளங்குபவர் ரொறன்ரோ நகர முதல்வர் றொப் போஃர்ட் என்றால் தவறிருக்க முடியாது.

இவர் ஊடகங்களைக் கைவிட்டாலும் இவரை ஊடகங்கள் கைவிடுவதாக இல்லை என்பதே யதார்த்தம்!

ஆதரவு அலையைவிட எதிர்ப்பு அலையே அரசியலில் பிரகாசமாக வைத்திருக்கும் என்பதை றொப் போஃர்ட் நன்கறிந்து வைத்திருக்கிறார் போலும்!

இப்போது இவருக்குப் பின்னால் ஒரு கோஷ்டி சுலோக அட்டைகளுடன் திரிகிறது. இவர்கள் 'றொப் லெஸ்' ஆட்கள்! இவர்கள் தம்பின்னால் வருவதை போஃர்ட்டும் விரும்புகின்றார்.

'நீ போகுமிடமெல்லாம் நாமும் வருவோம், வா! வா!' என்றும் திரியும் இவர்கள் எல்லோரும் போஃர்ட்டுக்கு எதிராக பரப்புரை மேற்கொள்ளும் மேலாடை அணியாத ..... ஆண்கள்.

## வெற்றிக்கு முன்னரே அச்சான தபால் தலை!

உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டி ஜுலை மாதம் 13ம் திகதி பிரேசிலில் நடைபெற்றது. இதில் ஜேர்மனியும் ஆர்ஜன்டீனாவும் மோதின.

இப்போட்டியில் தாமே வெற்றி பெறுவோம் என்றொரு நம்பிக்கை ஜேர்மனியிடம் இருந்திருக்கிறது. இதனால் முற்கூட்டியே வெற்றியை வெளிப்படுத்தும் அஞ்சல் தபாற் தலையை ஜேர்மனிய அரசு அச்சிட்டு 'றெடி'யாக வைத்திருந்தது.

போட்டியின் வெற்றி அறிவிக்கப்பட்ட அடுத்த நிமிடமே இந்தத் தபால் தலை பகிரங்கமாக மக்கள் பார்வைக்கு வந்து விட்டது. ஆனால் ஜுலை 17ம் திகதியே விற்பனைக்கு விடப்பட்டது.

உதாசனன்
உலா விருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எஸ். ராஜ்மோகன்

# பணிலமாடம்

5

## அந்தப் பாவி யார்?

இலங்கையில் ஐந்தாம் வகுப்புத் தமிழ்ப்பாடப் புத்தகத்தில் 'அந்தப் பாவி யார்?' என்ற ஒரு கதையின் அழகான காட்சியமைப்பு இன்னும் கண்முன்னே தோன்றிப் பழைய நினைவுகளை மீட்டெடுக்கின்றது.

பலத்த இடி முழக்க மழையில் பயணிகளுடன் பஸ் வண்டி ஒன்று இடையில் நின்று விடுகின்றது. யாரோ ஒரு பாவியால் தான் இடிவிழும் ஆபத்து இருப்பதாகவும், அந்தப் பாவி யார் என்று கண்டுபிடிக்க தூரத்தில் இருக்கும் ஒற்றை மரமொன்றை ஒவ்வொருவராகச் சென்று தொட்டுவிட்டு வரவேண்டும் எனவும் தீர்மானிக்கப்படுகின்றது. இதில் உடன்பட்ட ஒவ்வொருவரும் பஸ்ஸை விட்டு இறங்கி மரத்தைத் தொட்டுவிட்டு வந்துவிடுவார்கள். இந்த மூட நம்பிக்கைக்கு உடன்படாமல் வாக்குவாதப்பட்டு, அங்கு பாவியாக எல்லோராலும் கருதப்பட்ட இளைஞன் கடைசியாக பஸ்ஸை விட்டு இறங்கி மரத்தை நோக்கிச் சென்ற போது பஸ் மேல் இடி விழுந்து விடுகின்றது. அவன் தப்பிவிடுகின்றான்.

வழமைபோல் இடி விழுந்த பிறகுதான் அந்தக் கதையில் பாவிகள் யார் என்று தெரியவருகின்றது. நமது கவிஞர்கள் மின்னலை அதிக அளவில் சினிமாப் பாடல்களில் வர்ணித்த காரணமோ என்னவோ இடி, மின்னல் பற்றி நாம் பெரிதும் அக்கறை கொள்வதில்லை. எம்மைச் சார்ந்தவர்- களுக்கு இதனால் பாதிப்பு ஏற்படும் போது மட்டுமே மின்னலின் பாரதூரமான பாதிப்புக்களை அறிந்து கொள்கின்றோம்.

அண்மையில் ஸ்ரோவில் கோல்வ் விளையாட்டுத் திடலில் இடம்பெற்ற மின்னல் தாக்குதலில் கோல்வ் விளையாடிக் கொண்டிருந்த நான்கு பேர் காயத்திற்குள்ளான செய்தியை நீங்கள் அறிந்திருப்பீர்கள். இதில் 60 வயதுடைய ஒருவர் மிகவும் ஆபத்தான நிலையில் இருந்து காப்பாற்றப்பட்டிருந்தார்.

கனடா வானிலை நிலையத்தின் கணிப்பின்படி ஒவ்வொரு வருடமும் கிட்டத்தட்ட பத்துக் கனடியர்கள் மின்னலினால் தாக்கப்பட்டு இறப்பதாகவும், வருடாவருடம் 100-160 பேர் வரையிலானவர்கள் இதனால் தாக்கப்பட்டு பாதிக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

எங்களையும், எங்களைச் சூழ உள்ளவர்களையும் பாதுகாத்துக் கொள்வதற்காக மின்னலின் பாதிப்பு பற்றியும் அதில் இருந்து எம்மைப் பாதுகாப்பதற்கான சில அடிப்படைகளையும் தெரிந்து கொள்வோம்.

இடியும் மின்னலும் இல்லாத கோடை காலமே இல்லை என்று கூறலாம். வெப்பம் அதிகமாக உள்ள காலங்களில் வெப்பக் காற்றானது கருந்திரள் மேகங்களை உருவாக்கி மேகங்களுக்கிடையே காற்றாக வீசுகின்றது. அப்போது மேகங்களுக்குள் இருக்கின்ற நீர்த்துகள்களும் பனிக்கட்டிகளும் ஒன்றுடன் ஒன்று உரசும் போது மேகத்தினுள் மைனஸ் (-) எனப்படும் எதிர்மறை மின்னூட்டத்தின் அளவு அதிகரித்து கீழ் நோக்கிக் கடத்தப்படும்.

பூமியின் மேற்பரப்பில் பிளஸ் (+) எனப்படும் நேர் மின்னூட்டம் அதிகளவில் நிறைந்து காணப்படுவதால், மேகத்தில் தோன்றிய எதிர்மறை மின்னூட்டங்கள் தமது இயல்புகளினால் பூமியில் இருக்கும் நேர் மின்னூட்டங்களைக் கவர்ந்து இழுகின்றன. இவை ஒன்றுடன் ஒன்று இணையும் போது சக்தி வெளிப்பட்டு இடி, மின்னல் உருவாகின்றது.

ஜூன் மாதத்தில் இருந்து ஆகஸ்ட் மாதம் வரை அதிகளவில் ஏற்படும் மின்னல் தாக்குதலில் கூடுதலான பாதிப்புகள் ஏற்படுவது ஒன்ராறியோ மாகாணத்தில் என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும். மின்னல் தாக்குதல் ஏற்படும் போது அதிகபட்சமாக 30000 பாகை செல்சியஸ் வரை வெப்பம் உருவாக்கப்பட்டு மில்லியன் கணக்கான வோல்ட்ஸ் (volts) மின்சாரம் கடத்தப்படுகின்றது.

இடியும் மின்னலும் ஒரே நேரத்தில் எற்படுகின்ற போதும் ஒலியை விட ஒளி கூடுதலான வேகம் கொண்டதால் மின்னலைக் கண்ட பின்னரே இடியோசையைக் கேட்கமுடியும். மின்னலுக்குரிய அறிகுறிகள் தெரிந்தவுடன் வீடு, வாகனம், வர்த்தக நிலையங்கள், உயரமான கட்டடங்கள் போன்ற மூடிய நிலையில் இருக்கும் பாதுகாப்பு இடங்களுக்குள் சென்று விட வேண்டும். உயரமான பொருட்கள், மரங்கள், மின்சாரக் கம்பங்கள், உலோகக் கம்பிகள் மற்றும் வேலிகளுக்கருகில் நிற்பதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும். பரந்த வெளிகளில் நிற்கும் போது தரையின் பள்ளமான பகுதிகளுக்குச் சென்று ஒதுங்கிவிட வேண்டும். அத்துடன் நீரினில் நிற்பதையும் தவிர்த்து விடவேண்டும்.

வீட்டினுள் இருக்கும் போது கதவுகள், ஜன்னல்கள், தொலைக்காட்சி, மின் அடுப்பு, மின்சார உபகரணங்கள், தீ உருவாக்கி போன்றவற்றிற்கு அருகில் இருத்தல் கூடாது. மின்சாரம் இலகுவில் கடத்தப்படக் கூடிய ஈரமான குளியல் அறை (sinks, tubs), தரைவழித் தொலைபேசிகள் போன்றவற்றையும் பாவித்தல் கூடாது.

மின்னல் ஏற்படும் போது எல்ம் (elm), பைன் (pine), ஓக் (oak) மற்றும் வாழை போன்ற மரங்கள் அதிகளவில் பாதிப்படைவதற்கான காரணம் இந்த மரங்களின் நடுப்பகுதியில் காணப்படும் நீர்த்தன்மையான பகுதி மின்னல் கடத்தப்படுவதற்குப் பயன்படுவதாகும். பாரிய மின்னல் இதனூடு பாயும் போது இந்த மரங்களின் நடுப்பகுதி இலகுவில் வெப்பமடைந்து, வெப்பம் தாங்காமல் பட்டையைப் பிளந்து கொண்டு வெடித்துச் சிதறிவிடும். இது போன்ற மரங்கள் இடி தாங்கிகளாகச் செயற்பட்டு மின்னலைப் பூமிக்குள் பாதுகாப்பாகக் கடத்திவிடுகின்றன.

வானிலை ஆராய்ச்சியாளர்களால் இலகுவில் அனுமானித்துக் கொள்ள முடியாத மின்னல் தாக்குதலில் இருந்து எம்மை பாதுகாப்பது எங்களின் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளிலேயே தங்கியிருக்கின்றது.●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இரா. சம்பந்தன்

# தேடுதல் வெளிச்சமும் கம்பராமாயணமும்!

இன்றைய அறிவியல் உலகம் காலத்துக்குக் காலம் ஒவ்வொன்றாகக் கண்டுபிடித்துப் பயன்படுத்தும் எத்தனையோ நவீன தொழில் நுட்ப சாதனங்களை எல்லாம் ஏற்கனவே தாம் பயன்பாட்டில் வைத்திருந்ததாகத் தெரியப்படுத்தும் ஒரு இதிகாசம் கம்பராமாயணம் ஆகும்.

இன்றைய அணு ஏவுகணைகளை பாசுபதாஸ்திரம் என்றும் எதிரிகள் மீது நச்சு வாயுத் தாக்குதல்களை நிகழ்த்தி மயக்கமடையச் செய்வதைப் பிரம்மாஸ்திரப் பிரயோகம் என்றும் இன்றைய சுப்பர் சொனிக் விமானங்களை புஸ்பக விமானம் என்றும் கம்பராமாயணம் அறிவிக்கின்றது!

கிட்கிந்தையிலே இராமன் ஏழு மராமரங்களைத் துளைத்தது விளையாட்டுச் செய்தியல்ல! இன்றைய ஏவு களைகள் போல கம்பியூட்டர் போன்ற ஏதோ ஒன்றில் புரோக்கிராம் செய்யப்பட்டு ஏழு என்ற எண்ணிக்கையில் இருந்த அனைத்தையும் துளைத்து வரும்படி அனுப்பப்பட்ட அம்பு ஏழாக இருந்த அனைத்தையும் துளைத்த வரலாற்றை அங்கு காண்கின்றோம்!

இன்றும் கூட ஒரு ஏவு கணையால் ஒரு இலக்கை மட்டும் தாக்கும் நிலையிலேயே விஞ்ஞானம் நிற்கின்றது. ஆனால் இராமாணத்திலே ஒரு கணையால் ஒன்றுக்கும் மேற்பட்ட இலக்குகள் தாக்கப்பட்ட வரலாறு காணப்படுகின்றது.

இன்னும் சொல்வதென்றால் எண்ணிக்கையை மட்டும் இலக்காகக் கொண்டு தாக்கும் திறன் கொண்ட ஆயுதங்களை இன்றைய விஞ்ஞானம் கண்டு பிடிக்காத நிலையில் அதை தாங்கள் பாவித்த செய்தி பற்றித்தான் கம்பனின் இதிகாசம் பேசுகின்றது.

இவற்றைப் போலத்தான் Flare Gun என்று சொல்லப்படும் ஆயுதப் பயன்பாட்டைப் பற்றியும் இராமாயணம் எடுத்துக் கூறுகின்றது. 1800களின் பிற்பகுதியில் தோற்றம் பெற்று தேடுதல் வெளிச்சமாகவும் சமிக்கை வெளிச்சமாகவும் இன்றுவரை பயன்படும் இந்தவகை ஆயுதம் அதே தேவைக்காக இராமனால் பயன்படுத்தப்பட்டது என்று கம்பன் சொல்கின்றான் இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்னால்!

கானகத்திலே இலட்சுமணனை தாகத்துக்குத் தண்ணீர் எடுத்துவர அனுப்பி விட்டு இருந்த இராமன் இருட்டிலே இலட்சுமணனால் வெட்டப்பட்டு பெருங்குரல் எடுத்து அழுத இராவணன் தங்கையின் சத்தம் கேட்டுத் திகைக்கின்றான்! அந்த அழுகை ஓசை வந்த திசை நோக்கி ஆயுதங்களை எடுத்துக் கொண்டு ஓடுகின்றான்!

பாதை தெரியாத இருட்டு! உடனே இராமன் அக்கினி பாணம் எனப் பெயரிடப்பட்ட ஒரு கணையை எடுத்து கைக்குள் வைத்து திரித்த உடனே இங்கிருந்த இருட்டு மறைந்து வேறு உலகத்துக்கு ஓடிவிட அந்த இரவு வேளையும் பகல் போல வெளிச்சமானதாக ஆகியது! அது கம்பன் சொன்ன செய்தி!

அங்கியின் நெடும்படை வாங்கி ஆங்கு அது
செங்கையில் கரியவன் திரிக்கும் எல்லையில்
பொங்கு இருள் அப்புறத்து உலகம் புக்கது
கங்குலும் பகல் எனப் பொலிந்து காட்டிற்றே.

இந்தச் செய்தி கம்பராமாயணம் ஆரணிய காண்டத்தில் அயோமுகிப் படலத்தில் வருகின்றது! இங்கே நாம் சிந்திக்க வேண்டியது இக்கால விஞ்ஞானம் ஆயுதத்தில் இருந்து வெளிச்சம் உண்டாக்கித் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபடும் இராணுவ முயற்சியை கண்டறிந்து ஆரம்பிக்கும் முன்னரே அது நிகழ்த்தி முடிக்கப்பட்ட வரலாறு இராமாணத்தில் உள்ளது என்பது மட்டும் தான்!

அது மட்டுமல்ல இன்று போல அன்றும் அது போர்க்கருவியாக இருந்திருக்கின்றது. தேவை கருதி வில்லில் இருந்து செலுத்தக் கூடியதாக அது வடிவமைக்கப் பட்டு இருந்திருக்கின்றது!

அப்படிப் பார்த்தால் குருசேத்திரப் போர்க்களத்திலே நடந்த நிகழ்ச்சிகளை அரண்மனையில் இருந்து கொண்டு திருதராட்டினன் சஞ்சய முனிவன் மூலம் தண்ணீர்ப் பாத்திரத்திலே காட்சிகளாக கண்டான் என்று வியாசர் பாரதம் சொல்கிறதே!

அந்தக் காலத்தில் இது எப்படி முடிந்தது! என்ன தொழில்நுட்பத்தை பயன்படுத்தி அவர்கள் காட்சிகளை அனுப்பினார்கள் என்று யாரும் ஆராய்ந்ததாகத் தெரியவில்லை! ஆனால் இராவணனின் பத்துத் தலை பற்றி ஆராய்ந்தவர்களே எங்களில் அதிகம்!●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



குரு அரவிந்தன்

# உயர்ந்த கோபுரங்கள் 5

சொந்த மண்ணை விட்டு வந்து, புகுந்த மண்ணான ரொறன்ரோவில் சீ.என். கோபுரம் என்ற உயர்ந்த கோபுரத்தைப் பார்த்த போது எனக்கு ஆச்சரியமாக இருந்தது. ஏற்கனவே கனடாவில் உள்ள சீ என் கோபுரம் தான் உலகத்திலேயே ஒரு காலத்தில் உயர்ந்த தனிக் கோபுரமாக இருந்தது எனப் பத்திரிகையில் படித்திருந்தேன். கண்முன்னால் நிஜமாகவே அந்தக் கோபுரம் உயர்ந்து நின்றபோது என்னால் அதைப் பார்த்து ஆச்சரியப்படாமல் இருக்க முடியவில்லை.



ரொறன்ரோ டவுன்ரவுனில் உள்ள சி. என். கோபுரம் 1976ஆம் ஆண்டு கட்டப்பட்டது. 1815 அடி உயரமான இக்கோபுரத்தில் ஏறிப்பார்க்க விரும்புபவர்கள் காலை 9:00 மணியில் இருந்து இரவு 10:30 மணிவரை பார்வையிட முடியும். நத்தார் தினத்தைத் தவிர ஏனைய தினங்களில் அனேகமாகத் திறந்திருக்கும். 58 வினாடிகளில் உங்களை 1136 அடி உயரத்திற்குக் கொண்டு செல்லக்கூடிய விரைவான மின்தூக்கிகள் (elevators) இக் கோபுரத்தில் பொருத்தப்பட்டிருக்கின்றன. இதன் உச்சியிலே உணவு விடுதி ஒன்றும் இருக்கின்றது. இந்த உணவு விடுதியின் விசேடம் என்னவென்றால் விருந்தினர்கள் உணவருந்தும் போது, மெல்ல மெல்ல சுற்றி வந்து மேலே இருந்தபடியே எல்லாப் பக்கமும் அவர்கள் பார்க்கக் கூடியதாக அமைந்திருக்கிறது. 1465 அடி உயரத்தில் ஸ்கைபொட் என்ற தளம் இருக்கின்றது. இந்த தளத்திற்குச் செல்வதற்குப் பிரத்தியேகமாக அனுமதிச் சீட்டு வாங்க வேண்டும். உங்களுக்கு அதிர்ஷ்டம் இருந்தால், காலநிலை நன்றாக இருக்கும் பட்சத்தில் இத்தளத்தில் இருந்து நயாகரா நீர்வீழ்ச்சியை மட்டுமல்ல, அமெரிக்காவின் நியூயோர்க் பகுதியையும் பார்க்க முடியும்.

1972 ஆம் ஆண்டு இந்தக் கோபுரத்தின் கட்டுமான வேலைகள் ஆரம்பமாகின. 1974ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 22 ஆம் திகதி இந்தக் கோபுரத்தின் கட்டுமான வேலைகள் முடிந்தாலும், அன்ரனா பொருத்தும் வேலை முடியாமல் இருந்தது. 335 அடி நீளமான அன்ரனாவை கோபுரத்தின் உச்சியில் பொருத்துவதற்கு சுமார் மூன்று கிழமைகள் எடுத்தன. 44 துண்டுகளாகப் பிரிக்கப்பட்டிருந்த இந்த அன்ரனா வானூர்தியின் உதவியோடு மேலே கொண்டு செல்லப்பட்டுப் பொருத்தப்பட்டது. இவ்வாறு பொருத்தப்பட்ட இந்த அன்ரனா இன்று முப்பதுக்கும் மேற்பட்ட தொலைக்காட்சி அலைகள் ஒளிபரப்பு செய்ய உதவியாக இருக்கின்றது. இதைவிட அதிக வானொலி அலைகளை ஒலிபரப்பவும், குறிக்கப்பட்ட தூரத்திற்கு அலைபேசிகள் இயங்கவும் உதவுகின்றது.

1168 அடி உயரத்தில் சி. என் கோபுரத்தைச் சுற்றி வெளியே உள்ள நடைபாதையில் நடந்து செல்வது என்பது மிகவும் பயத்தையும் நடுக்கத்தையும் ஏற்படுத்தக் கூடியது. இதைவிட கண்ணாடியால் போடப்பட்ட தரை ஒன்றும் உயரத்தில் இருக்கின்றது. 1122 அடி உயரத்தில், 256 சதுர அடி பரப்பளவைக் கொண்ட கண்ணாடித் தரையாக இது இருக்கிறது. இத்தரையின் தாங்கு சக்தியைப் பரிசோதித்துப் பார்த்தவர்களின் அறிக்கையின்படி, சுமார் பதினான்கு நீர்யானைகளின் பாரத்தைத் தாங்கக் கூடிய சக்தியை இக் கண்ணாடிகள் கொண்டிருக்கின்றன. இரண்டரை அங்குல தடிப்பைக் கொண்ட இக் கண்ணாடிகளின் மேல் அத்தனை உயரத்தில் நடக்கும்போது தலையைச் சுற்றுவது போன்ற உணர்வு கட்டாயம் உங்களுக்கு ஏற்படலாம். ஆனாலும் கண்ணாடியில் நிற்கிறோமே என்ற பயத்தைத் தவிர்த்தால், இயற்கைக் காட்சிகளை இங்கிருந்து நன்றாக ரசிக்க முடியும்.

குறிப்பிட்ட சில நாட்களில் இரவு நேரத்தில் சி. என் கோபுரத்தின் நிறம் வெளிச்ச விளக்குகள் மூலம் மாற்றப்படுவது உண்டு. குறிப்பாக கனடா தினத்திலன்று இரவு நேரத்தில் சிகப்பும் வெள்ளையும் கலந்த நிறமாகக் கோபுரம் காட்சி தரும். உல்லாசப் பயணிகளைக் கவருவதற்காக 'சி. என். கோபுர கோடைகால புகைப்படப் போட்டி' என்று சிஎன் கோபுரம் பற்றிய புகைப்பட போட்டி ஒன்றை நிர்வாகத்தினர் தற்போது அறிவித்திருக்கிறார்கள்.

2007 ஆம் ஆண்டு வரை அதி உயரமான தனிக் கோபுரமாக இருந்த சி. என். கோபுரம் துபாயில் 2722 அடி உயரத்தில் கட்டப்பட்ட (Burj Khalifa) கோபுரம் காரணமாக இரண்டாம் இடத்திற்குத் தள்ளப்பட்டுள்ளது.●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கனடா மூர்த்தி

# கண்டதைச் சொல்கிறேன் 13

கடந்த மூன்று தமிழர் தகவல் இதழ்களிலும் இந்த 'கண்டதைச் சொல்லுகிறேன்' பகுதி வெளிவரவில்லை. எழுதி அனுப்ப முடியாமல் போனதற்கான காரணங்களாக பிரயாணம், தேர்தல் அது இது என 'கண்டதை'யும் சொல்லி தமிழர் தகவல் ஆசிரியரிடம் சமாளித்துப் பார்த்தேன். நான் சொன்ன காரணங்களை அவர் நம்பினாரோ என்பதுதான் தெரியவில்லை. அது ஒருபுறமிருக்க...

கடந்த ஜூன் மாதம் நடந்த ஒன்ராறியோவின் மாநிலஅவைத் தேர்தலில் ஈழத்தமிழர் ஒருவரை என்டிபி எனப்படும் புதிய ஜனநாயகக் கட்சியும், இருவரை ப்ரோக்ரஸிவ் கன்ஸவேடிவ் பார்ட்டி எனப்படும் முற்போக்கு மரபுநிலைவாதக் கட்சியும் நிறுத்தியிருந்தன அல்லவா. அத்தேர்தலில் நம் தமிழ் முகப்புத்தக உலகும் சேர்ந்தே பங்காற்றியது. *'கட்சி வித்தியாசம் பாராமல் தமிழர்களுக்கு வாக்களியுங்கள்"* என்ற பிரசாரம் முகப்புத்தகத்தூடாக ஒரு விழிப்புணர்வு பிரச்சாரம்போலவே நடத்தப்பட்டது.*'வாக்களி தமிழா* என்ற கோஷத்துடன் தமிழர்கள் தமிழர்களுக்கு வாக்களிக்கவேண்டும் என்ற ஒரு தனிப் பிரச்சாரமும் கவனத்தைக் கவர்ந்தது. அதேசமயம் *'தமிழன் என்பதற்காக வாக்களிக்க வேண்டாம் - கட்சிக்காக வாக்களியுங்கள்* என மாற்றுக் கருத்துச் சொன்னவர்களும் முகப்புத்தகத்தில் இருந்தார்கள். ஆனால் பெருமளவு தமிழ் வாக்காளர்கள் தமிழர்களுக்கு வாக்களிப்போம் என்ற நிலைப்பாட்டை எடுத்து வாக்களித்தார்கள் என்பது மறுக்க முடியாதது.

ஒன்ராறியோவின் மாநிலஅவைத் தேர்தலில் போட்டியிட்ட மூன்று ஈழத்தமிழர்களுமே கடுமையான போட்டி கொடுத்தார்கள். அமைச்சர்களையும், பலகாலமாக அரசியலில் களத்தில் இருந்தவர்களையும் எதிர்த்து - அவர்களின் அரசியல் இருப்பையே உலுக்கிவிடும் அளவிற்கு - நம் ஈழத் தமிழர்கள் ஒன்றாக இயங்கித் தம் போட்டியிடும் பலத்தைக் காட்டினார்கள். ஈற்றில் வெற்றிவாக்கு எண்ணிக்கையில் இரண்டாவது நிலைக்கு அந்த மூவரும் வந்திருந்தார்கள். கடைசி நிமிடத்தில் லிபரல் அலை அடித்ததால் இம்மூவரும் வெற்றிபெற முடியாது போய்விட்டாலும் அவர்களின் முயற்சி தமிழர் வரலாற்றில் பதிவாகியது.

தேர்தலில் லிபரல் அலை அடித்ததற்கு ப்ரோக்ரஸிவ் கன்ஸவேடிவ் கட்சியின் வேலைக்குறைப்புத் தீர்மானம்தான் காரணம் என்பது உய்த்துணரக்கூடிய ஒன்று. (இதுபற்றி கடந்த இதழ் தமிழர்தகவலிலும் விளங்கப்படுத்தப்பட்டிருந்தது.) ஒருவேளை அந்தத் தீர்மானம் கொண்டுவரப்படாமல் இருந்திருந்தால் நாம் மூன்று தமிழர்களை மாநிலஅவை எம்பிபிக்களாக பார்த்திருந்திருக்க முடியும். சாய்ந்தால் சாய்ந்த பக்கம் கடைசிநேரத்தல் மக்கள் சாய்வது என்பது தேர்தல்காலத்தில் நாம் காணும் ஒன்று. அதைத்தான் 'தேர்தல் அலை' என்பார்கள். மீடியாக்கள் உருவாக்கும் திட்டமிட்ட அலைகளால் தேர்தல் முடிவுகள் கடைசி நிமிடத்தில் மாறும். அதையெல்லாம் கவனிக்காமல் 'மக்கள் சரியான முடிவு எடுத்திருக்கிறார்கள்" அல்லது 'தவறான முடிவு எடுத்திருக்கிறார்கள்" என்று யாரும் தீர்க்கமாக சொல்ல முடியாது.. தேர்தல் களத்தில் நின்ற தமிழ் வேட்பாளர்கள் 'தகுதியற்றவர்கள்' என்ற தனிப்பட்டவகைப் வசைபாடல்களும் முகப்புத்தகத்தில் ஒரிருவரால் ஏற்றிவைக்கப்பட்டிருந்தன. (முகப்புத்தகத்தில் வசைபாடுவதற்கு தகுதி தேவையில்லைத்தானே.) நம்மிடையே ஆரோக்கியமற்ற எதிர்மறைக் கருத்துக்கள் ஒரு தொற்று வியாதியாகிக் கொண்டுவிட்டதோ? அவ்வகைக் கருத்துக்களையெல்லாம் பேஸ்புக் கருத்துச் சுதந்திரம் என்றும் சொல்லலாம். ஆனால் When you judge another, you do not define them. You define yourself என்றுதான் அவர்களைப் பார்க்கமுடிகிறது. எதிர்மறைக் கருத்துக்களை சொன்னவர்களைவிட தேர்தலில் போட்டியிட்ட தமிழ் வேட்பாளர்கள் 100,000 மடங்கு தகுதிவாய்ந்தவர்கள் என்றுதான் நான் சொல்வேன்.

ஆயினும் இவ்விடத்தில் ஒன்றைக் குறிப்பிட வேண்டும். தன்னால் விரும்பப்படும் அரசியல் கட்சியை ஆதரிக்குமாறு ஒருவர் மற்றவர்களிடம் கோருவது ஜனநாயகத்தின் பண்பு. ஆனால் 'தான் ஆதரிக்காத ஒரு கட்சியை' இன்னொருவர் ஆதரிப்பதை விமர்சிக்க யாருக்கும் உரிமை கிடையாது. அந்த ரீதியில் யாராவது விமர்சனம் செய்வார்களேயானால் அரசியலில் அவர் கற்றுக்குட்டியே என்பது என் அபிப்பிராயம். அத்தகைய எதிர்ப்பு விமர்சனங்களை முகப்புத்தகத்திலும் செய்தவர்கள் உண்டு.

தேர்தல் சூடு ஏற ஏற முகப்புத்தக நண்பர்களில் ஓரிருவர் காரசாரமாக விவாதித்துக் கொண்டோம். ஸ்டேட்மென்டுகளால் சண்டையிட்டும் கொண்டோம். காரமும் சாரமும் கலந்த பதிவுகள் 'வாக்கு'வாதங்களாக வந்தன. படித்தவர்கள் தத்தம் மனோதர்மத்திற்கு ஏற்ற விதமாக தத்தம் முடிவுகளை தம்முள் எடுத்துக் கொண்டனர். உண்மையில் நம் தமிழ் முகப்புத்தக விவாதங்கள் பெரிய தாக்கத்தை மாநில அளவில்கூட ஏற்படுத்தும் வீச்சுக் கொண்டவையல்ல..

முகப்புத்தகப் பதிவுகளில் ஒரு சுவாரஸ்யமான விதியை அவதானிக்கலாம். ஒருவர் ஒருதலைப்பட்சமான கருத்துக்களை பதிவாக எழுதினால், அதைப்புரிந்து சரியானதொரு மாற்றுக் கருத்தை யாராவது பதிவிடாதவரையில் படிப்பவர்கள் முதல் பதிவைத்தான் கண்ணை மூடிக்கொண்டு ஏற்றுக் கொண்டு விடுகிறார்கள். அடுத்தடுத்து லைக் பண்ணியும் விடுகிறார்கள்.
ஒரு முறை ஏதோ ஒரு மரத்தில் மீது விளையாடிக் கொண்டிருந்த குரங்கு ஒன்று தவறி கீழே விழுந்துவிட்டது. விழுந்த குரங்கு மயங்கிவிட்டது. மயக்கம் தெளிந்து எழுந்து பார்க்கும்போது மரத்தில் இருந்த மற்றக் குரங்குகளும் விழுந்து கொண்டிருந்தன. துணுக்குற்ற முதல் குரங்கு தனக்குப் பக்கத்தில் விழுந்து, கையுடைந்து கிடந்த தன் காதலிக் குரங்கை பார்த்து 'ஏன் விழுந்தாய் சினேகிதியே" என்று கேட்டதாம்.. 'உன் மீதுள்ள காதலால் நான் அதிர்ச்சியடைந்து விழுந்தேன்" என்றதாம் காதலிக் குரங்கு. 'சரி.. நாம் விழுந்ததற்குக் காரணம் இருக்கிறது. மற்றக் குரங்குகள் விழுந்து விழுந்து கைகால்களை முறித்துக் கொண்டிருக்கின்றனவே.. அது ஏன்?" என்று அவற்றைக் கேட்கப் போனால்... 'நீங்கள் விழுந்ததைக் கண்டோம். விழுவதுதான் உலக நியதி என்று நினைத்து நாங்களும் விழுந்து கொண்டிருக்கிறோம்" என்று தொடர்ந்து விழுந்து கொண்டிருந்த அந்தக் குரங்குகளிடமிருந்து பதில் கிடைத்ததாம்.. இது எப்படி இருக்கு..? அரசியலில்கூட தெளிவற்ற மக்களின் வீழ்ச்சி இப்படித்தான் ஆரம்பிக்கிறது.●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மகிந்த ராஜபக்சவின் கிளாஸ்கோ விஜயத்தை ரத்துச்செய்ய வைத்த

# புலம்பெயர் தமிழரின் பேரெழுச்சி ஆர்ப்பாட்டம்















கடந்த மாதம் 23ம் திகதி ஸ்கொட்லாந்தின் கிளாஸ்கோ நகரில் ஆரம்பமாகிய பொதுநலவாய விளையாட்டுப் போட்டிக்குச் செல்லவிருந்த இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் விஜயம் இறுதி நேரத்தில் ரத்துச் செய்யப்பட்டது தெரிந்ததே. பிரித்தானிய தமிழ் இளைஞர் அமைப்பின் ஏற்பாட்டில் புலம்பெயர்ந்த தமிழர்கள் ஏற்பாடு செய்த எதிர்ப்பு நடவடிக்கையே இதற்குக் காரணம். இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தினை எடுத்துக் காட்டும் சில ஒளிப்படங்கள் இப்பக்கத்தில்.














Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கனடா அனலைதீவு கலாசார ஒன்றியத்தின் 'தாயும் சேயும்'








அனலைதீவில் அமைக்கப்பட்டு வருகின்ற மருத்தவமனைக்கு நிதி சேகரிப்பதற்கான நிகழ்வொன்று கடந்த மாதம் ரொறன்ரோவில் நடைபெற்றது. இங்குள்ள அனலைதீவு கலாசார மன்றம் ஏற்பாடு செய்த இந்நிகழ்வுக்கு மருத்துவமனை நிர்மாணிப்பில் பிரதான பங்கு வகித்து வருகின்ற வைத்திய கலாநிதி குமார் கிருபா தலைமை தாங்கினார். நிகழ்வின் சில ஒளிப்படங்களை இங்கு காணலாம்.

## 'மல்லிகை' டொமினிக் ஜீவாவுக்கு இலக்கியத் தோட்ட விருது

கனடா தமிழ் இலக்கியத் தோட்டம் வழங்கும் இயல் விருது (2013) இவ்வருடம்'மல்லிகை ஆசிரியர் டொமினிக் ஜீவாவுக்கு அவருடைய 88வது பிறந்த நாளையொட்டி சிறப்பு விருதாக வழங்கப்பட்டது. இந்த விருது பரிசுக் கேடயமும், 2500 டாலர் பணப் பரிசும் கொண்டது. 'ஈழத்தமிழ் நவீன இலக்கிய எழுச்சியின் சின்னம் எனப் போற்றப்படும் இவர் இந்த விருதைப் பெறும் 15வது ஆளுமை ஆவார். முற்போக்கு இயக்கத்தின் முக்கிய பண்புக் கூறுகளான சமூகமயப்பாடு, சனநாயகமயப்பாடு ஆகியவற்றின் பெறுபேறாக எழுச்சி பெற்ற பல படைப்பாளிகளில் டொமினிக் ஜீவா குறிப்பிடத் தகுந்தவர்.

டொமினிக் ஜீவா 1927ஆம் ஆண்டு ஜுன் மாதம் 27ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் ஜோசப் - மரியம்மா தம்பதிகளுக்கு பிறந்தார். இவரது தந்தையார் ஜோசப் ஒரு கலைப் பிரியர். நாட்டுக் கூத்தில் நாட்டமுடையவர். தாயார் மரியம்மாவோ அருவிவெட்டுக் காலங்களில் நாட்டுப்புறப் பாடல்களைப் பாடி, சக தொழிலாளர்களை மகிழ்வித்தவர். கலையில் ஈடுபாடு கொண்ட தாய் - தந்தையர்க்குப் பிள்ளையாகப் பிறந்த ஜீவா, கலை இலக்கிய ஆளுமையின் ஊற்றுக்கண்ணை பெற்றோரிடமிருந்து பெற்றார். பின்னாளில் ஈழத்தமிழ் இலக்கிய வரலாற்றில் ஒரு சாதனையாளராக மிளிர்வதற்கான பின்புலம் இப்படி அமைந்தது.

பல்வேறு தவிர்க்க முடியாத காரணங்களால் இவரது கல்வி ஐந்தாம் வகுப்புடன் முற்றுப் பெற்றது. இலங்கையில் தலைமறைவு வாழ்வை மேற்கொண்டிருந்த தோழர் ப. ஜீவானந்தம் அவர்களை 1948ஆம் ஆண்டு ஜீவா சந்தித்தார். அவரது பொதுவுடமைக் கொள்கைகளால் கவரப்பட்டார். அது அவரது சமூக, அரசியல், இலக்கிய செல்நெறியைத் தீர்மானித்த ஒரு மகத்தான சந்திப்பானது. ஜீவானந்தம் மீதான அபிமானம் காரணமாக டொமினிக் என்ற தமது பெயரை 'டொமினிக் ஜீவா என மாற்றிக் கொண்டார்.



டொமினிக் ஜீவா இன்றி ஈழத்தமிழ் நவீன இலக்கியம் இல்லை என்று சொல்லலாம். கருத்து முரண்பாடுகளைப் புறந்தள்ளி, அவர் இலக்கியத்திற்கு ஆற்றிய பணிகளை உற்றுநோக்கும் எவரும், இந்த உண்மையை ஒப்புக்கொள்வர். ஒரு முழுநேர இலக்கியக்காரனாகத் தமது வாழ்நாள் முழுவதும் அயராது உழைத்தார். ஈழத்தமிழருக்கென்றேயான நவீன இலக்கிய மரபு ஒன்று தோன்றிய காலத்திலிருந்து அதன் பிரதம பேச்சாளராகச் செயற்பட்டார். ஈழத்திற்கும் தமிழ்நாட்டிற்கும் இடையிலான ஆரம்பகால இலக்கிய உறவுப் பாலமாகத் திகழ்ந்தவர். தமது இலக்கியப் பணிகளூடாக இனங்களுக்கிடையில் புரிந்துணர்வுடன் கூடிய, சகஜ நிலைமையை ஏற்படுத்தப் பாடுபட்டவர்.

டொமினிக் ஜீவா இதுவரை 5 சிறுகதை தொகுப்புகள் வெளியிட்டுள்ளார். அதில்'தண்ணீரும் கண்ணீரும்' தொகுப்பு இலங்கை சாகித்திய மண்டலப் பரிசை வென்றது. 5 கட்டுரை தொகுதிகளும் எழுதியிருக்கிறார். இவரைப் பற்றிய பல ஆய்வு நூல்கள் வெளிவந்திருக்கின்றன. 'மல்லிகை' எனும் இலக்கியச் சிற்றிதழும், 'மல்லிகைப் பந்தல்' எனும் பதிப்பகமும், இளவயது முதல் அதீத நம்பிக்கையுடன் (31ஆம் பக்கம் வருக)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரொறன்ரோவில் கறுப்பு ஜுலை 31வது ஆண்டு நிகழ்வு












ஜே.ஆர் ஜெயவர்த்தனாவின் தலைமையிலான சிங்கள இனவெறி அரசினால் திட்டமிட்டு நடத்தப்பட்ட தமிழினப் படுகொலையின் 31வது ஆண்டு நினைவு நிகழ்வு ஸ்காபரோ அல்பர்ட் காம்பல் அரங்கில் கடந்த மாதம் 20ம் திகதி பிற்பகல் நடத்தப்பட்டது. இந்நிகழ்வில் ச்ரவதேச இன அழிப்பு விவகார நிபுணர்கள் குழுவின் தலைவர் பேராசிரியர் டானியல் பியர்ஸ்டெய்ன் சிறப்புப் பேச்சாளராகக் கலந்து உரையாற்றினர். கனடாவின் பல்வேறு அரசியல் மட்டப் பிரமுகர்களும் இங்கு உரையாற்றினர். மலர் வணக்கம், அக வணக்கம், எழுச்சிக் கலை நிகழ்ச்சிகள் ஆகியனவும் இடம்பெற்றன. போர்க்குற்றங்கள் குறித்து சிறீலங்கா அரசு மீது சுயாதீனமான சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டும்; போர்க் கைதிகள் அனைவரும் உடனடியாக சர்வதேச கண்காணிப்பில் கொண்டுவரப்பட வேண்டும்; மனித உரிமைகளைச் சிறீலங்கா அரசாங்கம் மதிக்கும் வரை ராஜரீக பொருளாதாரத் தடைகள் விதிக்கப்பட வேண்டும் ஆகிய தீர்மானங்கள் இங்கு நிறைவேற்றப்பட்டன.















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

NOW HIRING

JOIN OUR DYNAMIC TEAM



Looking for a Career change?
Freedom, Flexibility and
Unlimited income potential

Give us a Call today

Chandran Rasalingam CHS
President & CEO
Dir: 416 909 0400

INFORCE LIFe
Financial Services Inc.

Bus: 416 321 6000 x400
www.inforcelife.com
career@inforcelife.com
10 Milner Business Court, Suite 707, Scarborough ON M1B 3C6
Like us on Facebook

printfast.ca



BRMC TORONTO

Brimley Road Medical Centre

WALK-IN CLINIC
&
FAMILY PRACTICE

புதிய சேவைகள்
- இதய மருத்துவச் சேவை (Heart Clinic - Echo, Stress Test, Holter & Consultation)
- சிறப்பு மருத்துவர்களின் சேவை (Specialists)
- புதிய பெண் குடும்ப மருத்துவரின் சேவை

✓ புதிய நோயாளர்கள் ஏற்றுக் கொள்ளப்படுவார்கள்.
✓ ஆண், பெண் குடும்ப மருத்துவர்களுடன் 7 நாட்களும் சேவை.

Dr. சாந்தி முத்துலிங்கம், MD, CCFP
Dr. உதயன் சோமசுந்தரம், MD, CCFP
Dr. சுபாதினி செந்தில் மோகன், MD, CCFP
Dr. நஸ்ரத் கான், MD, CCFP

| | |
|---|---|
| MON - THU | 9:00 - 7:00 |
| FRIDAY | 9:00 - 5:00 |
| SAT & SUN | 9:00 - 2:00 |

- ஆய்வுகூடச் சேவை (Life Lab)
- மருந்தகச் சேவை (IDA Pharmacy)
- இயன் மருத்துவச் சேவை (Brimley Physiotherapy)

*'We speak your language'*

416.412.3333

3333 Brimley Road
Scarborough, ON M1V 2J7
(Between Steeles & McNicoll)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முருகவே பரமநாதன் (ஆழ்கடலான்)

# தாயகத்தில் தமிழாசிரியர் பரம்பரை

ஞானநெறிக் கேற்றகுரு - நண்ணரிய சித்தி முத்தி
தூனந் தருமம் தழைத்தகுரு - மானமொடு
தாசியெனவும் வந்தென் னைத்தந்தகுரு என்சிந்தை
கோயிலென வாழும் குரு.

எங்கள் ஈழமணித்திருநாடு 25,000 சதுர மைல் என அளவிடப்பட்டுள்ளது. இதிலே பல்லின மக்கள் வாழ்கின்றனர். சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள், பறங்கியர் இந்நாட்டுப் பிரசைகள். இவர்களிற் தமிழ் பேசுவோர் தமிழரும் முஸ்லிம்களும் ஆவர். இலங்கையிற் பல பாகங்களிலும் இஸ்லாமியர் நானா பக்கங்களிலும் வாழ்கின்றனர். இவர்களின் தாய்மொழி தமிழாகவே தென்படுகிறது. தமிழர்களின் தாய்மொழியும் அவ்வண்ணமே. தமிழினம் வடகீழ் மாகாணங்களில் வாழ்கின்றனர். இடைக்காலத்தில், தமிழ்நாட்டார் தேயிலைத் தோட்டங்களிற் குடியேறினர். இவர்களின் பாசையும் ஒரு கலப்புத் தமிழே. சுத்தமான தமிழ் வடகீழ் மாகாணங்களில் இருப்பினும், சுத்த தமிழ் வடக்கே பேசப்படுகிறது.

ஒருமுறை கல்கி ஈழம் வந்தபோது, யாழ்ப்பாணத்திற் தட்டுத்தடுமாறி வழுக்கி வீழ்ந்தால் ஓர் தமிழாசிரியரிலேதான் வீழ்வார் எனக் குறிப்பிட்டிருந்தார். வீட்டுக்கு ஒருவர் இருப்பர். புண்டிதர், வித்துவான்களுக்கும் குறைவில்லை. சுத்த தமிழ் யாழ்ப்பாணத் தமிழ். இந்த வழி வழி மரபு அவர்களுக்கே சொந்தம். இந்த மொழியருமை பேச்சிலேயே சொலிக்கும். இலக்கணச் சுத்தமான மொழியது. கலப்படமற்ற தமிழை வளர்த்தவர்கள் தமிழ் ஆசிரியர்களே.

ஒரு முறை யான் ஐம்பதுகளில் கண்டியிலிருந்து கதிர்காமம் சென்றபோது அங்கேயமைந்த பள்ளியொன்றில் அசல் தமிழர் ஒருவர் சேவையாற்றுவதைக் கண்டேன். அடுத்த இடமான மாத்தறையில் கூடின விழுக்காடு தமிழ் ஆசிரியர்கள் கடமையாற்றக் கண்டேன். ஆக, மாத்தறையில் இருந்து காங்கேசன்துறை வரை யாழ்ப்பாணப் பிரதேச ஆசிரியர்கள் சேவையாற்றக் கண்டேன். இந்தப் பள்ளிக்கூட அமைப்பு எப்படி உருவானது? பண்டை நாட்களிலே ஊருக்கோர் ஆசிரியர் பாடம் சொல்லிக் கற்பிப்பார். மண் வீடுவாசல்தான் குடும்ப அமைப்பு. எனவே, மண்ணாலான திண்ணையே பள்ளிக்கூட அமைப்பு. பணமாகவோ, உணவுப் பொருளாகவோ சம்பளம் வழங்கப்படும்.

இவ்வமைப்பினாற் திண்ணை பிரதான பங்களிப்பு நல்கும். இஃது சமண மதத்திலும், பௌத்த அமைப்பிலும் சகசம். எனவே சமண பௌத்த அமைப்பையே தமிழர்களும் பின்பற்றினர். நிகண்டு, நன்னூல் படிப்பிக்கப்படும். வாத்தியார், திண்ணை, சட்டம்பியார் வழக்கமான உபயோகங்கள். என் மாமனார் ஒருவர் திண்ணைப் பாடசாலையிற் கற்றுத் தேறியவரே. பின்னர் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை வந்து விட்டது. ஆரம்ப ஆசிரியர் சம்பளம் 20 ரூபா. பயிற்றப்பட்டவர் சம்பளம் நாற்பத்து இரண்டு ரூபா. உடையென்ற அளவிற் சீருடை கிடையாது. ஆசிரியர் வெண்துகில் ஆடையணிவார். 8 முழவேட்டி மேலங்கியாகத் தோட்பூட்டுள்ள ஆபாரம். காலிலே செருப்பு அணிவர். பெண் ஆசிரியைகள் பட்டாடை அணிவர். இதுதான் உபாத்தியாயரின் ஆடையமைப்பு. இன்று நம்மூர்ப் பல்கலைக்கழங்களில் தோட்பூட்டுச் சட்டையே அணிவார்கள். காலப்போக்கில் உடை மாறலாம். தோளிலே சால்வை போடுவர். விஷேச விழாக்களில் பட்டுடை அணிவர். இத்தமிழ் ஆசான்கள் ஒழுக்கசீலராய் வாழுவர். பொதுவில் தூய உடை முக்கியம்.

காலப்போக்கில் மாற்றம் அடைந்து பல இன வேட்டிகள் உருவாகி விட்டன. சைவாசிரியர்கள் சந்தனப் பொட்டும் போடுவர். திண்ணைப் பள்ளிகள் மாற்றமடைந்து முன்மாதிரியான கட்டிடங்கள் உருவாயின. ஆள்பாதி ஆடைபாதி என்பர். நாகரிக உடைகள் உருவாயின. என்றாலும் ஆசிரியர்கள் வெண்ணாடையே அணிந்தனர். கல்யாண வீட்டில் இவ்வுடை அறிமுகமானது. நல்லுடைகள் நாகரிக ஆடைகளாயின.

பள்ளிக்கூடங்கள் உருவாயின. ஆசிரியர்கள் தேவையெனவே ஆசிரிய பயிற்சிச் சாலைகள் உருவாயின. வெவ்வேறு மத பீடங்கள் ஆசிரியப் பயிற்சிக் கலாசாலைகளை உருவாக்கின. கிறிஸ்தவர்கள் வெவ்வேறு கலாசாலைகளைக் கட்டி நல்ல விரிவுரையாளர்களை நியமித்தனர். சைவாரிய கலாசாலையும் உருவானது. 1700 வேட்டி, 22க்கு 22 லண்டனில் இருந்துவரும். ஆயிரத்து எழுநூறு, இருபத்து இரண்டுக்கு இருபத்திரண்டு இங்கிலாந்து வேட்டிகள்.

கல்யாண வீட்டிற் தலைப்பாகை அணிவர். இஃது ஒரு தொன்மை மரபு. எனவே ஓர் உபாத்தியாயர் முழவேட்டி கட்டி, தோள்பூட்டுச் சட்டை போட்டுச் சால்வையும் அணிவர். இஃது தேசிய உடை. வேட்டியிலே ஆரணியன் வேட்டி, குண்டஞ்சி வேட்டி, பரமால் வேட்டி போன்ற உடுப்பும் அணிவர். இவர்கள் அதிபராயும் சேவை ஆற்றினர். பொலநறுவைக்காடு, வன்னிக்காடு, மட்டக்களப்புப் பிரதேசம் என்றும் பூமிகளில் தமிழாசிரியர்கள் சேவை செய்தனர். தேயிலைத் தோட்டங்களிலும் கடமையாற்றினர். அப்போது அரசாங்கப் பாடசாலைகளிலும் தனியார் முகாமைத்துவங்களிலும் தமிழ் ஆசிரியர்கள் சேவையாற்றினர். கிறிஸ்தவப் பள்ளிகள், தனியார் பள்ளிகள், கல்லூரிகளில் இவர்கள் கடமையாற்றினர். முஸ்லிம்களைக் கல்வித் துறையில் முன்னேற்றியதும் தமிழ்ச் சட்டம்பிமார்தானே.

இப்படிப் பலதுறைகளிற் தமிழாசான்கள் முன்னோடிகளாய் வாழ்ந்து காட்டினர்.

ஆசிரியர்களை உருவாக்க ஆசிரியப் பயிற்சிக் கலாசாலைகள் உருவாயின. மகளிர் பள்ளிகளும் உருவாயின. தமிழாசான்கள் சேவை மிகமிக உயர்ந்தது.

கற்க கசடற கற்ப வைகற்றபின்
நிற்க அதற்குத் தக - குறட்பா●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Dr. Shan A. Shanmugavadivel & Associates

## டாக்டர் அ. சண்முகவடிவேல்



* Orthodontics * Implants * Cerec Crowns

பற்களை ஒழுங்கு செய்தல், 'இம்பிளாண்ற்' சிகிச்சைகளில் கனடாவில் பயின்ற பல வருட அனுபவமுள்ள குடும்ப பல் வைத்தியர்.

**MONDAY - SATURDAY**

**(416) 266-5161**

(Near Kennedy Subway - Rainbow Village Building)

**RAINBOW VILLAGE DENTAL OFFICE**

2466 Eglinton Avenue East, Unit #7
Scarborough, Ontario M1K 5JB





# Computek College

BUSINESS · HEALTH CARE · TECHNOLOGY

Est. 1991

www.computek.edu

We provide assistance for Second Career funded Applicants. E.I receiving /received, Maternity benefits received, WSIB, Ontario Works clients & New Immigrants welcome

**SECOND CAREER**

**You maybe eligible upto $28,000 to pay for:**

Living Expenses
Transportation
ChildCare
Books
Tuition and other

**Diploma Programs**

- Early Childcare Asst (ECA)
- Personal Support Worker (PSW)
- Medical Office Admin (MOA)
- Computerized Accounting
- Business Administration
- Application Development
- Network Engineering
- Enterprise Network Engineering

| Markham Campus | Scarborough Campus | Toronto Campus |
|---|---|---|
| Markham / Steeles | Kennedy / Sheppard | Kennedy / Eglinton |
| 905.471.3344 | 416.321.9911 | 416.285.9941 |

Not all the courses are available at all the locations




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நக்கீரன்

# என்றுமுள்ள செந்தமிழ் 79

## பாதக் கமலங்கள் காணீரே பவளவாயீர்வந்து காணீரே!

இந்தப் புவியில் பிறந்தவர் கோடி, மறைந்தவர் கோடி ஆனால் வரலாற்றில் இடம் பிடித்தவர் மிகச் சிலரே.

பெத்லகேமில் ஒரு மாட்டுத் தொழுவத்தில் ஏழைக் குடும்பத்தில் பிறந்தவர் இயேசு. அவரது வளர்ப்புத் தந்தை ஒரு தச்சுத்தொழிலாளி. அவரும் வளர்ப்புத் தந்தையின் தொழிலான தச்சுத் தொழிலை இளவயதில் மேற்கொண்டார். யூதர்கள் அவர் தெய்வ நிந்தனை செய்தார் எனக் குற்றம்சாட்டி அவரை சிலுவையில் அறைந்து கொன்றார்கள். அவர் இறக்கும் போது அகவை 30 மட்டுமே. ஆனால் இன்று அவரது பிறந்த நாள் உலகம் முழுதும் கொண்டாடப்படுகிறது.

இறைதூதர் மொகமது நபி மெக்காவில் பிறந்தவர். பிறக்கு முன் தந்தையார் இறந்து விட்டார். அவரது ஆறாவது அகவையில் தாயார் அமீனா இறந்து விட்டார். பின்னர் அவரது பாட்டனார் அப்துல் முத்தாலிப் அவர்களால் வளர்க்கப்பட்டார். மொமது நபிக்கு எழுதப் படிக்கத் தெரியாது. இருந்தும் அவரை இறைதூதர் என உலகம் போற்றுகிறது.

சித்தார்த்தன் என்ற பெயரைக் கொண்ட புத்தர் அரச குலத்தில் இன்றைய நேபாளத்திலுள்ள லும்பினி என்னுமிடத்தில் பிறந்தவர். இவரது தந்தையார் பெயர் சுத்தோதனர். தாயார் மாயா சித்தார்த்தர் பிறந்த ஏழாவது நாளில் இறந்து போனார். அவரை சிற்றன்னை எடுத்து வளர்த்தாள். பதினாறு அகவையில் கோலி நாட்டு மன்னன் மகள் யசோதரையை மணந்தார். இராகுலன் என்ற மகன் பிறந்தார்.

தனது 29 ஆவது அகவையில் மானிட வாழ்க்கையில் பிணி, மூப்பு, சாக்காடு போன்ற துன்பங்களில் இருந்து மனிதன் விடுபட்டுப் பேரின்பப் பெருநிலையை எய்துவது எப்படி? இந்தக் கேள்விக்கு விடை தேடும் பொருட்டு சித்தார்த்தர் மனைவி, பிள்ளை, அரண்மனை வாழ்வு ஆகியவற்றைத் துறந்து துறவியானார். காடு, மேடு, தவம், விரதம், தியானம் என அலைந்தார். முனிவர்களை நாடினார். சுகபோகத்தில் அழுந்திக் கிடப்பதும் தக்க பலனைத் தராது கடும் தவம் புரிவதும் தக்க பலனைத் தராது என்ற முடிவுக்கு புத்தர் வந்தார்.

தனது 35 ஆவது அகவையில், இந்தியாவின் தற்போதைய பீகார் மாநிலத்தில் உள்ள காயா எனும் இடத்தில் ஒரு அரச மரத்தின் கீழ் உறுதியான மனத்துடன்"என்னுடைய உடம்பில் உள்ள தோல், சதை, இரத்தம், நரம்பு, எலும்பு முதலியவை உலர்ந்து வற்றிப் போனாலும் நான் புத்த பதவியை அடையாமல் இந்த இடத்தை விட்டு எழுந்திருக்க மாட்டேன், என்று உறுதியான எண்ணத்துடன் ஏழு நாட்கள் யோகத்தில் ஆழ்ந்தார். பின்னர் பெருஞ்ஞான நிலையை அடைந்து புத்தரானார்.

யான் எனது என்னும் செருக்கை அறுத்து, ஆரா இயற்கை அவாவை நீக்கி, பேதமை அகற்றி, தீயவை அஞ்சி, எண்ணத்தில் தூய்மை கொண்டு, வினைத் தூய்மையையும் மேற்கொண்டு, மூத்த அறிவுடையார் தொடர்பில் இணைந்து வாழ ஒருவனை ஊக்குவிப்பதே புத்தரின் போதனையாகும். இவரது பிறப்பு, ஞானம் பெற்ற நாள், இறப்பு மூன்றும் வைகாசி பவுர்ணமி நாளில் உலகம் முழுதும் கொண்டாடப்படுகிறது.

இந்தியத் திருநாட்டின் ஒட்டுமொத்த வரலாற்றில், தனிப்பட்ட ஒரு மனிதனோ, அல்லது நிகழ்வோ மிகப்பெரிய ஒரு திருப்புமுனையை ஏற்படுத்தியிருக்கிறது என்று சொல்லமுடியாது. ஆனால் கோகுலத்தில் கண்ணனுடைய பிறப்பு இந்திய வரலாற்றில், இலக்கியத்தில், பண்பாட்டில், கலாசாரத்தில் என எல்லாவற்றிலும் ஒரு தாக்கத்தை உருவாக்கியுள்ளது. திருமாலின் அவதாரமான கண்ணன் சமய தளத்தில் ஒரு முக்கிய இடத்தை பிடித்துள்ளார்.

பெரியாழ்வாரின் திருமொழி (முதல் பத்து) கண்ணனின் திரு அவதாரச் சிறப்பை நவில்கிறது. பெரியாழ்வார் தன்னை யசோதையாகவும் இறைவனைக் குழந்தையாகவும் பாவித்துப் பாடிய பாடல்கள் தான் பெரியாழ்வார் திருமொழி! ஒரு தாயின் மனநிலையை அப்படியே அச்சொட்டாகப் பாடியுள்ளார். முதல் பாடலை சென்றமுறை பார்த்தோம். தொடர்ந்து தேன் தமிழில் பாடப்பெற்ற இரண்டாவது பாடலைப் பார்ப்போம். இந்தப் பாடல், கண்ணன் பிறந்ததால், ஆயர்களும் ஆய்ச்சியரும் எவ்விதம் மகிழ்ச்சி ஆரவாரம் புரிந்தனர் என்ற காட்சியை நம் கண் முன் காட்டுவதாய் உள்ளது.

ஓடு வார்விழு வார் உகந் தாலிப்பார்
நாடு வார்நம்பி ரான்எங்குற் றானென்பார்
பாடு வார்களும் பல்பறை கொட்டநின்று
ஆடு வார்களும் ஆயிற்று ஆய்ப் பாடியே. (திருமொழி 2)

ஓடுவார் - கண்ணன் பிறந்துவிட்டான் என்ற செய்தியைக் கேட்டதும், ஆயர் குல ஆடவரும் பெண்டிரும் நந்தகோபருடைய மாளிகையை நோக்கி விரைந்து ஓடினர்

விழுவார் - முதல் பாடலில் சொல்லியிருந்த வண்ணம், எண்ணெய் சுண்ணம் கலந்த கண்ணன் முற்றத்தில் இருக்கும் அளற்றில் (சேற்றில்) வழுக்கி விழுந்தனர்

ஆயினும் அவர்கள் அதைப் பொருட்படுத்தாது, விரைந்தெழுந்து கண்ணனை நோக்கி ஓடினர்.

உகந்தாலிப்பார் - பெரும் மகிழ்ச்சி ஆரவாரக் கூச்சல் போட்டு ஒருவரை ஒருவர் உணர்ச்சிப் பெருக்கோடு தழுவித் தங்கள் மகிழ்ச்சியை வெளிப்படுத்திக் கொண்டனர்.

(உகந்தாலிப்பார் - உகந்துஆலிப்பார் - விரும்பி, மகிழ்ச்சியோடு கூச்சலிடல், ஆரவாரம் செய்தல்)

கோகுலத்திலுள்ள எல்லோரும் தங்கட்குத் தலைவரான நந்தகோபர்க்குப் பிள்ளை பிறந்ததாகக் கேள்விப்பட்டு அளவற்ற மகிழ்ச்சி அடைந்து தாம் செய்வது இன்னதென்று தெரியாமல், சிலர் ஓடினார்கள் சிலர் சேற்றிலே வழுக்கி விழுந்தார்கள் சிலர் உரக்க ஒலித்தார்கள் சிலர் 'நம் கண்மணி எங்கே?' என்று குழந்தையைத் தேடினார்கள் சிலர் பாடினார்கள் சிலர் பறையடிக்க சிலர் அதற்கு ஏற்பக் கூத்தாடினார்கள். ஆயர்பாடியில் இருந்தவர்கள் எல்லோரும் அளவற்ற மகிழ்ச்சியில் மூழ்கியிருந்தார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீதக் கடல்உள் ளமுதன்ன தேவகி
கோதைக் குழலாள் அசோதைக்குப் போத்தந்த
பேதைக் குழவி பிடித்துச் சுவைத்துண்ணும்
பாதக் கமலங்கள் காணீரே பவளவாயீர்வந்து காணீரே!
(திருமொழி 3)

வேதத்தில் . . . . . . . . (திருமாலின் சிறந்த திருவடியில் தேன் வெள்ளமுண்டு) என்று சொல்லப்பட்டுள்ளது. இதை அடியொற்றி ஆழ்வார்களும்'தேனே மலரும் திருப்பாதம் என்கிறார்கள். இப்படிப்பட்ட தனது திருவடியிலுள்ள தேனைப் பருகுவதற்காகவும் தனது திருவயிற்றில் கிடக்கும் உலகங்கட்கெல்லாம் நன்மை உண்டாகும்படியாகவும் திருமால் தனது திருவடிகளில் ஒன்றையெடுத்து வாயிலே வைத்துச் சுவை பார்த்துக் கொண்டிருக்க, அதைக் கண்ட யசோதைப் பிராட்டி தான் மிக மகிழ்ந்து, இதைப் பிறகும் கண்டு மகிழவேணும் என்றெண்ணித் தன்னருகிலுள்ளாரைக் கொண்டாடியழைத்து, நீங்கள் இக்குழந்தை சுவைத்துண்ணும் இப்பாதக் கமலங்களைப் பாருங்கள்' என்று அவர்கட்குக் காட்டுகின்றாள்.

கடலில் இரண்டு அமுதம் பிறந்தன் ஒன்று தேவர்களுக்கு போக்யமான உப்புச்சாறாகிய அம்ருதம் அது புறவமுதமாம். மற்றொரு அம்ருதம்.'அமுதில் வரும் பெண்ணமுது எனப்பட்ட பிராட்டி: இவளே உள்ளமுதம். ஆகவே இங்கு'உள்ளமுதன்ன என்றது பிராட்டியைப் போன்ற என்றபடியாயிற்று. 'திருவின் வடிவொக்குந் தேவகி என்று மேலுங் கூறுவர். பிராட்டியைப் போலவே சீலமாகவுள்ள தேவகி என்க.
பெரியாழ்வாரின் திருவாய்மொழிப் பாடல்கள் சத்தான தமிழ்மொழிக்குக் கிடைத்த ஒளிவிடும் முத்துக்கள். தமிழை அமிழ்து என்று சிறப்பித்துச் சொன்னதே, பெரியாழ்வார் திருமொழியைப் படிச்சதுக்குப் பிறகுதானோ என எண்ணத் தோன்றுகிறது. ஆழ்வார்களின் பாடல்களை வைணவ (மாலியம்) சமயப்பாடல்கள் என்று சைவர்கள் ஒதுக்கிவிடாமல் அதன் இலக்கிய நயத்துக்காவது படித்து இன்புற வேண்டும். (வளரும்)


SIVAVATHANI
Prabaharan
COUNCILLOR Candidate
Scarborough Rouge River, Ward 41
Fundraising Dinner
August 17, 2014 at 6:00 pm
Princess Banquet Hall
3330, Pharmacy Avenue
Scarborough ON
M1W 3V8
Live Music & Dances



VIP$100
(Tax Receipt will be provided)
Fundraising proceeds will go to Sivavathani Prabaharan Campaign
Approved by the CFO of Sivavathani Prabaharan Campaign
Sivavathaniprabaharan1@gmail.com
Tax Rebate program up to 75% return

Get more from your home by paying less each month
Ragavan (Raga) Ramanathan AMP
Mortgage Development Manager
Platinum Performer
Scotiabank
You're richer than you think.
Tel: 416.579.7533
Fax: 416.352.1464
Email: ragavan.ramanathan@scotiabank.com






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறவுகள் பிரியும்போது மலைகளையே சுமக்கவேண்டிவருகிறது

**உங்கள் உறவுகளின் இறுதியாத்திரையை முறையாகவும், இலகுவாகவும் அமைத்திட நாங்கள் உதவுகிறோம்**













- மரண அறிவித்தல்கள்
  வீட்டிலிருந்த படியே விரும்பிய ஊடகங்கள் ஊடாக அறிவித்தல்களை வெளியிடவும்
- சமய சம்பந்தமான கிரியைகள் செய்பவர்களின் விபரங்களைப் பெற்றுக்கொள்ளவும்
- பூ அலங்காரங்கள், மாலைகள், பூப்பந்தல்களின் தெரிவுக்கும்
- விரும்பிய, பொருத்தமான Casket (மரணப்பேழை)களை பெற்றுக்கொள்ளவும்
- இணையத்தளத்தினூடாக நேரடி ஒளிபரப்புச் சேவையை பெற்றுக்கொள்ளவும்
- Slideshow உருவாக்கம் செய்யவும்
- உங்கள் கலாசார, பண்பாட்டு முறைப்படியே இறுதிச்சடங்குகளை ஒழுங்குசெய்வதற்கான ஆலோசனைகளை பெற்றுக்கொள்ளவும்
- உலகின் எப்பாகத்திலிருந்தும், எப்பாகத்திலும் Wreath (மலர்வளையம்) வைப்பதற்கான சேவையை பெற்றுக்கொள்ளவும்

MARANAM.COM

**HEAVEN CARES**

ADVISING FAMILIES ON YOUR LOVED ONE'S FINAL JOURNEY

www.maranam.com, E-Mail: info@maranam.com

Working With

Chapel Ridge

FUNERAL HOME INC.

PROVIDING PEACEFUL FINAL ARRANGEMENTS

8911 Woodbine Ave., Markham, ON L3R 5G1



Call: **Vilosan Sivatharman** B.Eng

Funeral Counsellor

**416-431-3600** Ext:1

Call: **Christeen Seevaratnam**

Funeral Counsellor


**416-431-3600** Ext:2






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்களுக்குத் தெரியும்,
நம்பிக்கையுடனான தரமான சேவைகள்..




- Corporate Awards
- Promotional Products
- Laser Engraving
- Pad Printing
- Silk Screening

*Vivek Subra*
Director
B:416- 291 2344
D:416- 898 4846
promarawards@gmail.com

www.promarawards.com 416-291 2344
585 Middlefield Rd Unit # 3, Scarborough, ON., M1V 4Y5




PRO MAR Ltd.
416 898 4846
vivekpromar@gmail.com

வாங்குவதும் விற்பதும் சுலபமே ஆனால்..
தெளிவான தெரிவே உங்கள் வெற்றிப்படி.

*Why think so long...?*





- Free market evaluation
- Professional advice on selling your home for more
- State of the art marketing idea
- Flexible commission
- Friendly service producing excellent results
- List through me to have your property sold in a few days


Mortgages & loans arrangements

Vivek Subramaniam
Sales Representative
416-898 4846

Homelife/Future
Realty inc. Brokerage
7 Eastvale Drive, Unit 205, Markham, On. L3S 4N8
Bus: 905 201 9977, Fax: 905 201 9229
Independently Owned and Operated







# கோவில் மாலைகள் மற்றும் பூஜை பொருட்கள்

5633 Finch Ave East, Unit # 6, Scarborough, ON M1B 5K9
(416) 288-1419

சொரி பூக்கள், சரம் மற்றும் பூஜைக்கு தேவைப்படும் இலை வகைகள்

| | | | |
|---|---|---|---|
| இறக்குமதி செய்யப்பட்ட கதம்ப சரம் | $ 2.00/ M | அறுகம் புல் | $ 3.00/bag |
| உள்ளூர் கார்னேஷன் சரம் | $ 2.00/M | வில்வம் இலை | $ 3.00/bag |
| மல்லிகைப்பூச்சரம் | $ 5.00/M | வேப்பிலை | $ 3.00/bag |
| கார்னேஷன் மலர்கள் | $ 0.20 each | Marukhalundu /Maru | $ 3.00 /bag |
| மல்லிகை மலர்கள் | $ 5.00/bag | மாவிலை | 10 per $ 1.00 |
| சம்பாகினி மலர்கள் | $ 3.00 /bag | வெற்றிலை | 10 per $ 1.00 |
| அரலி மலர்கள் | $ 3.00 /bag | வாழை இலை | $ 1.00 each |
| தாமரை மலர்கள் | $ 1.00 each | துளசி இலை | $ 3.00/bag |

Fancy Florist




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எஸ். கணேஷ்

# 20 ஆண்டுகளின் பின் ஜேர்மனியின் சாதனை!

உலகப் பந்தாட்டப் போட்டியில் உலகத்தர வரிசைப் பட்டியலில் 20 ஆண்டுகளுக்கு பிறகு ஜேர்மனி முதல் இடத்தை பிடித்து சாதனை படைத்துள்ளது.
இந்த ஆண்டு பிரேசிலில் நடைபெற்ற உலகக்கிண்ண போட்டியில் ஜெர்மனி சாம்பியன் பட்டம் வென்றது. இந்த வரலாற்று வெற்றியானது ஜேர்மனிக்கு முதலிடத்தை பெற்றுத் தந்துள்ளது.

அதே போல் மெஸ்ஸின் தலைமையில் இறுதிப்போட்டிவரை வந்த அர்ஜென்டினா அணி மூன்று இடங்கள் முன்னேறி இரண்டாவது இடத்தைப் பிடித்துள்ளது.

மூன்றாவது இடத்திற்கான ஆட்டத்தில் பிரேசிலை வீழ்த்திய நெதர்லாந்து 12 இடங்கள் முன்னேறி மூன்றாவது இடத்தைப் பிடித்தது. பிரேசில் நான்கு இடங்கள் பின்தங்கி 7வது இடத்துக்கு சென்றுள்ளது. நடப்பு சாம்பியனான ஸ்பெயின் லீக் ஆட்டத்திலே வெளியேறியதால் ஏழு இடங்கள் சரிந்து எட்டாவது இடத்தில் உள்ளது.

சுவிட்சர்லாந்து மற்றும் பிரான்ஸ் முறையே ஒன்பது, பத்தாவது இடங்களையும் பிடித்தன. காலிறுதிக்குத் தெரிவான கோஸ்டரிகாவின் வெற்றி அந்நாட்டை 12 இடங்கள் முன்னேற்றி 16வது இடத்தில் வைத்தது. முதல் சுற்றிலேயே வெளியேறிய ராய் ஹோட்க்சனின் இங்கிலாந்து அணி 10வது இடத்தில் இருந்து 20வது இடத்துக்கு தள்ளப்பட்டுள்ளது.

உலகக்கிண்ணம் வென்ற ஜேர்மனி பல்வேறு சாதனைகளைப் படைத்துள்ளது.

உலகக்கிண்ண தொடரின் ஆரம்பம் முதல் ஆதிக்கம் செலுத்தி வந்த ஜேர்மனி இறுதிப்போட்டியில் அர்ஜென்டினாவை 1-0 என்ற கோல் கணக்கில் வீழ்த்தி வரலாறு படைத்தது 24 ஆண்டுகளுக்கு பிறகு முதன்முறையாக உலகக்கிண்ணத்தை ஜேர்மனி அணி கைப்பற்றியுள்ளது. இந்த உலகக்கிண்ணத்தை வென்றதுடன் உலகக்கிண்ணத்தை அதிக முறை வென்ற நாடுகளின் பட்டியலில் இத்தாலியை சமன் செய்துள்ளது.

மேலும் தென்அமெரிக்க கண்டத்தில் நடந்த உலகக்கிண்ண போட்டியில் வெற்றி பெற்ற முதல் ஐரோப்பிய அணி என்ற வரலாற்று சாதனையை படைத்து அசத்தியுள்ளது. பல்வேறு சர்ச்சைகள், பொருளாதார சிக்கல்களுக்கு இடையே பிரேசிலில் உலகக் கோப்பை போட்டிகள் பற்றிய சில சுவையான தகவல்களைப் பார்ப்போம்:

நாள் முழுதும், வருடம் முழுதும், எப்போதும் கால்பந்தாட்டமே தங்களது உயிர் மூச்சு என்று காட்டிக்கொள்ளும் நாடு இங்கிலாந்து. ஆனால் இத்தனையாண்டு கால வரலாற்றில் அந்த அணி 1966ஆம் ஆண்டுதான் உலக சாம்பியன் பட்டம் வென்றது.

இங்கிலாந்து வீரர் ஜெஃப் ஹர்ஸ்ட் என்பவர் அந்த இறுதியில் ஹேட்ரிக் சாதனை புரிந்தார். அதுதான் கால்பந்து உலகக் கோப்பை இறுதிப்போட்டியில் முதலும் கடைசியுமான ஹேட்ரிக் என்பது குறிப்பிடத்தக்கது.
அவர் அடித்த 2வது கோல் இன்றும் பெரிய சர்ச்சைக்குரிய கோலாகவே உள்ளது. அது கோட்டைக் கடந்ததா இல்லையா என்பதுதான் பிரச்சனை.
முதலில் ரெட் கார்டு வாங்கி வெளியேறிய வீரர்:
1970ஆம் ஆண்டு மெக்சிகோ உலகக் கோப்பை போட்டிகளில்தான் சிகப்பு அட்டை, மஞ்சள் அட்டைகள் அறிமுகப்படுத்தப்பட்டன. ஆனால் அதில் எந்த வீரரும் வெளியேற்றப்படவில்லை.

1974ஆம் ஆண்டு மேற்கு ஜெர்மனிக்கு எதிரான குரூப் ஸ்டேஜ் ஆட்டத்தில் சிலி வீரர் கார்லோஸ் கேசிலே ரெட் கார்டு வாங்கி வெளியேறினார். இவர்தான் முதன் முதலில் ரெட் கார்டு வாங்கிய சர்வதேச வீரர்.

சர்வதேச கோல்கள்:
68 சர்வதேச கோல்கள் மூலம் ஜெர்ட் முல்லர், மிராஸ்லாவ் க்லோஸ் ஜெர்மனி வீரர்கள் இணை ரெக்கார்ட் வைத்துள்ளனர்.

இதில் அபாரம் யார் என்றால் ஜெர்ட் முல்லர்தான். அவர் 62 சர்வதேச போட்டிகளில் 68 கோல்கள் ஆனால் க்லோஸ் 131 போட்டிகளில் 68 கோல்கள் அடித்து சமன் செய்துள்ளார்.

அதிக ரசிகர்கள் பார்த்த உலகக் கோப்பை:
1994ஆம் ஆண்டு அமெரிக்காவில் நடைபெற்ற உலகக் கோப்பை கால்பந்து போட்டிகளில் அதிக ரசிகர்கள் மைதானத்திற்கு வருகை தந்துள்ளனர். சராசரியாக ஒரு போட்டிக்கு 69,000 ரசிகர்கள் வர மொத்தமாக 35,87,538 பேர் மைதானத்தில் வந்து போட்டியைக் கண்டு களித்துள்ளனர். இதன் இறுதி போட்டி பிரேசிலுக்கும் இத்தாலிக்கும் இடையே நடைபெற்றது, இதனைப் பார்க்க 94,164 ரசிகர்கள் வந்ததே இதுவரை சாதனை. பெனால்டியில் பிரேசில் இத்தாலியை வீழ்த்தியது.●

• Loans • Mortgages • Insurance Claims • Traffic Tickets •
JRB Universal Inc.
Almost All Services Available
647 289 6164

R.R. Rajkumar
B.Com (Hons), M.B.A.
Scholarship Plan [RESP]
Any Referral Service
• Credit Counseling • Accounting & Tax Services •



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# சொந்தமான ஒரு வீடு உங்கள் வாழ்க்கையின் மிகப்பெரியதோர் முதலீடு

# வீடு வாங்க விற்க

## ஈசன் குலசேகரம்

Sales Representative

**416 835 1700**

info@esanhomes.com

- வீடுகள்
- தொடர்மாடி வீடுகள்
- வியாபார நிலையங்கள்
- காணி முதலீடுகள்
- வாங்குதல் - விற்றல் மற்றும்
- வாடகைக்கு கொடுக்கவும் - பெறுவதற்கும்

RE/MAX

RE/MAX Vision Realty Inc., Brokerage

## விக்கி வேலாயுதன்

Sales Representative

**416 457 7162**

vvelauthan@yahoo.com





அனைத்துக்குமான ஆலோசனைகளுக்கும் நம்பிக்கையான சேவைகளுக்கும் நாடுங்கள்..

**Office: 416-321-2228 Fax: 416-321-0002**

www.esanhomes.com

**2210 Markham Road # 1 , Toronto, ON M1B5V6**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறிலங்கா போர் சொல்லும் கதைகள்

# இந்த பிளவுபட்ட தீவு



*சமந் சுப்ரமணியம் [Samanth Subramanian] 'இந்த பிளவுபட்ட தீவு' [This Divided Island] என்கின்ற தலைப்பில் நூலொன்றை வெளியிட்டுள்ளார். இந்நூலானது சிறிலங்காவின் மிகமோசமான கடந்த காலத்தையும் நிச்சயமற்ற நிகழ்காலத்தையும் வெளிச்சமிட்டுக் காட்டுகிறது. இந்நூலின் ஆசிரியருடன் Hindustan Times ஊடகத்திற்காக Sudha G Tilak மேற்கொண்ட நேர்காணலின் தமிழாக்கம் வருமாறு:*

கேள்வி: இந்த நூலைத் தாங்கள் எழுதுவதற்கு உந்துதல் வழங்கிய காரணி எது?
பதில்: போர் என்பதன் தாக்கம் என்பதை உணர்ந்ததன் ஒரு பகுதியாகவே இந்த நூலை நான் எழுதியுள்ளேன். நான் சிறிலங்காவை சேர்ந்தவன் அல்லன். ஆனால் நான் சென்னையில் வளர்ந்தவன் என்ற வகையிலும் நான் ஒரு தமிழன் என்ற வகையிலும் சிறிலங்காவில் எத்தகைய போர் இடம்பெற்றது என்பதை எழுதியுள்ளேன். இந்திய அரசியலில் சிறிலங்காவின் போர் என்பது ஒரு நிரந்தரப் பிரசன்னத்தையும் செல்வாக்கையும் கொண்டுள்ளதாகும். தமிழ்நாட்டில், இது மிகவும் அதிகமாகப் பேணப்படுகிறது. சிறிலங்காவில் தொடரப்பட்ட யுத்தம் என்பது ஊடகங்களில் அதிகம் பேசப்படுகின்ற ஒன்றாகக் காணப்படுகின்றது. இந்த யுத்தமானது முப்பதாண்டு காலமாக சிறிலங்காவில் தொடரப்பட்டது. ஆனால் நாங்கள் இது தொடர்பாக மிகச் சிறிய அளவிலேயே அறிந்துள்ளோம் என்பது போர்க் காலத்தில் சிறிலங்காவில் ஊடகத்துறை எவ்வளவு கடினங்களைச் சந்தித்திருக்கும் என்பதைச் சான்றுபடுத்துகிறது. ஊடகங்கள் சுதந்திரமாகச் செயற்பட முடியும் என சிறிலங்காவில் யுத்தம் முடிவடைந்த அன்றைய நாள் நான் கருதினேன். இது ஊடகவியலாளர் களுக்கான ஒரு சிறந்த வாய்ப்பாகவே நான் நோக்கினேன். போர்க் காலத்தில் பெற்றுக் கொள்ள முடியாத பல்வேறு தரப்பட்டவர்களின் உண்மையான கதையை வெளியுலகிற்குத் தெரியப்படுத்துவதற்கான வாய்ப்பாகவே இதை நான் கருதினேன். போர்க் காலத்தில் அங்கிருந்த மக்கள் எவ்வாறு தமது அன்றாடத்தைக் கழித்தார்கள் என்பதையும் அவர்களின் வாழ்வில் போரானது எவ்வாறான தாக்கத்தைச் செலுத்தியது என்பதையும் போரின் பின்னர் சிறிலங்கா எவ்வாறு உள்ளது என்பதையும் அறிய நான் விரும்பினேன்.

கேள்வி: சிறிலங்கா பெற்றுக் கொண்ட போர் வெற்றியானது மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள், பி.பி.சி செய்தியாளர்கள் மற்றும் ஐ.நா அதிகாரிகள் போன்றவர்களின் சவால்களுக்கு உட்பட்டுள்ளது. 'சிறிலங்காவில் சமாதானமானது ஆரோக்கிய மற்றதாகவும் வரவேற்கப்பட முடியாததாகவும் காணப்படுவதாக' நீங்கள் உங்களது நூலில் குறிப்பிட்டுள்ளீர்கள். இதனை விளக்குவீர்களா?
பதில்: போர் முடிவடைந்த கையோடு சிறிலங்காவில் மீளிணக்கப்பாட்டை உருவாக்குவதற்கான எத்தகைய மிகப் பெரிய வாய்ப்புக் காணப்பட்டது என்பதை நான் நூலில் விளக்கியுள்ளேன். ஆனால் இந்த வாய்ப்பு தவறவிடப்பட்டுள்ளது. சிறிலங்காவின் பெரும்பான்மைவாதிகளின் செயற்பாடுகளால் இந்த வாய்ப்பு நழுவவிடப்பட்டுள்ளது. சிறிலங்காத் தீவில் இன்னமும் இராணுவ வீரர்கள் மக்களின் வாழ்வில் தலையீடு செய்கின்ற நிலை காணப்படுகிறது. சிறிலங்கா அரசால் கற்றுக் கொண்ட பாடங்களுக்கான நல்லிணக்க ஆணைக்குழு உருவா- க்கப்பட்டது. இந்த ஆணைக்குழுவானது போரால் பாதிக்கப்பட்ட வர்களின் சாட்சியங்களைப் பதிவு செய்தது. இதன் அடிப்படையால் இவ் ஆணைக்குழுவால் முன்வைக்கப்பட்ட பரிந்துரைகள் சிறிலங்கா அரசாங்கத்தால் அசட்டை செய்யப்பட்டுள்ளன.
கேள்வி: பாரதீய ஜனதாக் கட்சி தலைமையிலான இந்திய மத்திய அரசாங்கமானது ராஜபக்ச அரசாங்கத்துடன் நட்புறவைக் கட்டியெழுப்புவது போல் தெரிகிறது. இது தொடர்பான தங்களின் கருத்து என்ன?
பதில்: இது பதில் சொல்வதற்கு தந்திரமான ஒரு கேள்வியாகும். சிறிலங்காவில் மீளிணக்கத்தை ஏற்படுத்துமாறு அந்நாட்டு அரசாங்கம் மீது இந்தியா அழுத்தம் கொடுக்க வேண்டும். இத்துடன் சிறிலங்கா மீதான ஐ.நாவின் போர்க் குற்றவியல் விசாரணைக்கு சிறிலங்கா அரசாங்கம் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என இந்தியா அழுத்தம் கொடுக்க வேண்டும். ஆனால் இது நடைமுறை உண்மைக்கு மாறுபட்டதாகவே காணப்படுகிறது. குறிப்பாக, இந்திய மத்திய அரசின் அரசியல் இதற்கான காரணமாகும். சிறிலங்கா தொடர்பில் தான் எத்தகைய கோட்பாட்டைக் கொண்டுள்ளது என்பதை இந்தியா வரையறுத்துக் கொள்ள வேண்டும். நீண்ட கால நோக்குடன் குறுகிய கால நலனை ஒப்பீடு செய்யாது இந்தியா, சிறிலங்கா தொடர்பில் தீர்க்கமான கோட்பாட்டை வரையறுக்க வேண்டும். இதற்கப்பால், இது தொடர்பான பதிலை நான் எனது நூலின் மூலம் வழங்க முடிந்துள்ளதா என்பது நிச்சயமற்றதாகும்.

கேள்வி: தெற்குப் புதுடில்லியில் யாழ்ப்பாணத்தை விட மிக அதிகமான பாதுகாப்பு அரண்களும் காவற்துறையினரின் சோதனைச்சாவடிகளும் உள்ளதாக சிறிலங்காவுக்குப் பயணம் மேற்கொண்டிருந்த பாரதீய ஜனதாக் கட்சிப் பிரதிநிதிகள் குழுவொன்று தெரிவித்திருந்தது. இதில் உண்மையுள்ளதா?
பதில்: இது உண்மையல்ல. சிறிலங்காவில் இராணுவத்தினரின் பிரசன்னம் அதிகமாகக் காணப்படுகிறது. பாரதீய ஜனதாக் கட்சியினர் கூறியுள்ளதில் இராணுவம் மற்றும் காவற்துறை ஆகிய இரண்டு பதங்களுக்கிடையிலான வரையறையைத் தெளிவாக நோக்க வேண்டும். யாழ்ப்பாணத்தில் சிறிலங்கா இராணுவத்தினர் மிக மோசமாகச் செயற்படுகின்றனர். சிறிலங்காவின் யாழ்ப்பாண மாவட்டத்தை அந்நாட்டு இராணுவத்தினர் ஆக்கிரமித்துள்ளது போன்று, சிறிலங்காவுக்குப் பயணம் செய்திருந்த இந்தியாவின் பாரதீய ஜனதாக் கட்சிப் பிரதிநிதிகளின் சொந்த மாவட்டங்களை இந்திய இராணுவத்தினர் ஆக்கிரமித்தால் இவர்களும் ஆத்திரமடைந்திருப்பார்கள்.

கேள்வி: சிறிலங்கா வாழ் தமிழர்களுக்கும் சிங்களவர்களுக்கும் இடையிலான பிரிவினை முடிவுக்கு வருமா?
பதில்: தமிழ், சிங்களவர்களுக்கு இடையிலான பிரிவினையானது வரலாற்று ரீதியானதும் ஆழமானதுமாகும். இப்பிரிவினையை சீர்செய்து இரு சமூகங்களுக்கும் இடையில் ஒற்றுமையை ஏற்படுத்துவதற்கு (மறுபக்கம் வருக)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

HERITAGE Education Funds

**RESP SAVINGS PLAN**

**கல்விச் சேமிப்புத் திட்டம்**

Your are eligible to apply for and Education Savings Grant of up to $7,200 per child

Your savings are more safe and secure

Your can start with a small amount

it's a more flexible plan

**EDUCATION IS A GREAT GIFT FOR YOUR FUTURE GENERATIONS**

உங்கள் பிள்ளைகளின் கல்விக்கான சேமிப்பு உங்கள் எதிர்கால தலைமுறைக்கான முதலீடு

WWW.KERUDAVIL.COM

**INCOME TAX PREPARATION**

**Personal Income Tax**

**Small Business Income Tax**

**Computerized Returns**

Graphic Land - 647. 219. 7576



S.Ganthiy
B.A. Srilanka
Enrollment Officer

**416. 841. 1866**
**416. 955. 9303**
E.mail: ganthiy@rogers.com

## இந்த பிளவுபட்ட தீவு..

சிறிலங்கா அரசாங்கம் முயற்சிக்கின்றது என்பதற்கான எவ்வித அறிகுறிகளும் காணப்படவில்லை.
சிறிலங்காவில் தொடரப்பட்ட யுத்தமானது தமிழர்களை, அனைத்துலக சமூகத்திலிருந்து அந்நியப்படுத்தியுள்ளதா என்றால் 'இல்லை' என்பதே அதற்கான பதிலாகும். சிறிலங்காவுக்கு வெளியேயுள்ள சமூகங்கள், புலிகளுக்கும் பொதுமக்களுக்கும் இடையிலான வேறுபாட்டை மிகவும் நேர்த்தியாகப் புரிந்துகொண்டுள்ளனர்.

கேள்வி: சிறிலங்காத் தீவில் வாழும் தமிழ் மக்கள் பற்றிய தங்களின் இறுதியான கருத்துக்கள் எவை?
பதில்: தனது சொந்த நாட்டிலேயே பாதுகாப்பற்ற கடந்த காலத்தையும், எதிர்காலத்தையும் கொண்டுள்ள சமூகமாக சிறிலங்கா வாழ் தமிழ் மக்கள் விளங்குகின்றனர் என்பது மிகவும் கவலைக்குரிய விடயமாகும். போர் முடிவடைந்ததன் பின்னர் தமிழ் மக்கள் நாட்டின் அரசியல் மற்றும் ஏனைய துறைகளில் பங்கெடுக்கக் கூடிய பாரிய வாய்ப்பொன்று காணப்பட்டது. ஆனால் இந்த அரிய வாய்ப்பானது நழுவவிடப்பட்டுள்ளது.

கேள்வி: தங்களது நூலின் முடிவுரையானது மிகக் கடுமையானதாகக் காணப்படுகின்றது. இதற்கான காரணம் என்ன?
பதில்: தற்போது சிறிலங்கா ஒரு கொடூரமான இடமாகக் காணப்படுவதாலேயே நான் எனது நூலின் முடிவையும் பயங்கரமாகவும், கடும் தொனியிலும் எழுதியுள்ளேன். இது தொடர்பில் நம்பிக்கையைக் கொடுக்கும் விதமாக எழுதுவதில் நான் எப்போதும் தயக்கம் கொள்கிறேன். இவ்வாறான சந்தர்ப்பங்கள் ஆட்சிக்கு வருபவர்களின் செயற்பாடுகளால் மாற்றமுறக் கூடியன. சிறிலங்காவில் வாழும் மக்கள் நம்பிக்கையுடன் வாழ்வதை நாம் காணலாம். ஆனால் சிறிலங்காவின் ஆட்சியாளர்கள் மக்களின் நம்பிக்கைக்கு ஊறுவிளைவிக்கும் நடவடிக்கைகளையே மேற்கொள்கின்றனர். இவர்கள் தாங்கள் வாக்குறுதிகளை வழங்கியதற்கு அமைவாக செயற்பாடுகளை மேற்கொள்ளவில்லை. சிறிலங்காத் தீவானது நம்பிக்கை ஒளிக்கீற்றுக்களற்ற, முரண்பாடுகளைக் கொண்ட ஒரு தேசமாக விளங்குவதால் இது தொடர்பில் நான் எனது தீர்க்கத்தரிசனமான எண்ணத்தை வெளிப்படுத்துவதில் தயக்கம் காண்பிக்கிறேன்.●

**The Children's Education Trust of Canada**
offered to the public by

**Children's Education Funds Inc.**



10 டாலரிலிருந்து ஆரம்பித்து
7200 டாலர்கள் வரை
கனடா அரசாங்கம் வழங்கும்
நன்கொடையைப் பெற்று
(20 வீத Grant)
உங்கள் பிள்ளைகளதும்
பேரப்பிள்ளைகளதும்
கல்வி வாய்ப்பை
ஊக்குவியுங்கள்.

**சமூக நம்பிக்கையையும் நன்மதிப்பையும் பெற்ற**

சிவா
கணபதிப்பிள்ளை

**அவர்களை அழைத்து விபரங்களைப் பெறுக!**

Siva Kanapathypillai
Dealing Representative

**418 899 6044**

email
s.kanapathypillai@cefi.ca



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ். குடா நாட்டில்...

பாதுகாப்புடன் கூடிய இந்த சுற்றுலா விடுதி குடும்பத்தினரோடு தங்குவதற்கும் இடம் கொடுக்கிறது. விடுதிக்கு முன் கோடம்பாக்கம் சினிமாபோல் காட்சிகள் எடுக்க சிறப்பாக இருக்கிறது. என்னோடு வந்த வாகனச் சாரதி சொன்னார். இந்த இடத்தில் ஆணும் பெண்ணும் ஓடிவந்து முத்தம் கொடுப்பார்கள். பல தடவை பார்த்திருக்கிறேன். முத்தக்காட்சியை பல தடவை படம் எடுத்திருக்கிறார்கள். நான் வியப்புடன் கேட்டேன் தமிழ்ப் படம் எடுத்தார்களா? தமிழர்களா முத்தமிட்டர்கள். சாரதி சலிக்காமல் தமிழரேதான். அவர்களை நானே பல தடவை அழைத்து வந்திருக்கின்றேன். ஆனால் சினிமாப் படம் எடுப்பதற்கு அல்ல. அவர்கள் புதுமணத் தம்பதிகள். திருமணம் முடிந்தபின் விடியோவில் முன்காட்சிப் பதிவு நடக்கும். அந்தக்காட்சிக்கான படப்பிடிப்புக்கள் இந்தக்கடற்கரை விடுதியை ஒட்டியே நடக்கும். என்றார்.

எனது கண்கள் ஏதிர்பாராவிதமாக இடதுபக்கம் திரும்ப. கறுப்பு வெள்ளை படம் போல மனத்திரையில் ஒரு படம் ஓடியது. அன்று நாம் கொழும்பு - கே.கே.எஸ் என்று அமர்ந்திருந்த புகையிரதப் பெட்டிகள் இரண்டு அழகுக்காக கடற்கரை மணலில் நிறுத்தி வைக்கப்பட்டு இருந்தது. பழசுகளைக்காண மனசு இளமையாகிக் கொண்டு போனது. விடுதிக்கு எதிர்புறத்தில் இன்னும் ஒரு பழசு. ஆம் அன்று பெரும் செல்வந்தர்கள் (நாம்தான்) வைத்திருந்த கார் (Morris Oxford). அதனை ஒரு கொட்டகை போட்டு நிறுத்தியுள்ளார்கள். ஒரு கி.மீ செல்வதற்கு 40 ரூபாய் வாடகை. எமது பழைய வாழ்க்கை அங்கு காட்சிப்படுத்தப்பட்டு இருந்தது. இனி வேட்டியும் சால்வையும் இட்டு ஒரு பெரியவரை அங்கு நிறத்தி இவர்தான் தமிழன் என்று தமிழன் காட்சிப் பொருளாகி விடுவானோ என்ற ஐயமும் கூடவே பிறந்தது.



கே.கே.எஸ் எப்படி இருந்தது தெரியுமா?
குழந்தைகள் இல்லா வீட்டில் பொருட்கள் வைத்த வைத்த இடத்திலேயே அப்படி இருப்பதுபோன்ற ஓர் 'அழகு' அது.
**இப்படி ஒரு அழகை ஆண்டவன் எந்த மனிதருக்கும் கொடுக்க வேண்டாம்.**
நன்றி: மாதவி - 'வெற்றிமணி', யேர்மனி.●

## 'மல்லிகை' டொமினிக் ஜீவாவுக்கு...

அவர் பின்பற்றிய அரசியல் மார்க்கமும் அரை நூற்றாண்டுக்கும் மேலாக அவரது பணிகளுக்கான விதைநிலங்களாக இருந்து வந்துள்ளன. இன்று தனித்துவமான சிந்தனையும், செயல்வலுவும் மிக்க ஒரு புதிய இலக்கியத் தலைமுறை அவற்றின் விளைச்சலாகத் தலைநிமிர்ந்து நிற்கின்றது.

பல்வேறு நிலைப்பட்ட அறிஞர்கள், கல்வியாளர்கள், புலமையாளர்கள், படைப்பாளிகள் பலரது பங்களிப்புகளுடன் வெளிவந்த''மல்லிகை' இதழ்களும்,''மல்லிகைப் பந்தல்' வெளியீடுகளும் இன்று பல்கலைக்கழகப் பட்டமேற்படிப்புக்களுக்கான ஆய்வுக்களங்களாகப் பயன்படுகின்றன; அறிஞர்களதும் ஆய்வாளர்களதும் தேடுதளமாக விளங்குகின்றன.

சிறந்த எழுத்தாளராகவும், சிற்றிதழ் வரலாற்றின் முன்னோடிச் சாதனையாளராகவும் கடந்த 48 ஆண்டுகளுக்கு மேலாக தமிழுக்கு தன்னை அர்ப்பணித்து ஆற்றிய சேவைக்காக டொமினிக் ஜீவாவுக்கு வாழ்நாள் தமிழ் இலக்கிய சாதனைக்கான இயல் விருது (2013) கனடிய தமிழ் இலக்கியத் தோட்டத்தினால் கடந்த மாதம் 17ம் திகதி கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் நடைபெற்ற நிகழ்வில் வழங்கப்பட்டது.●


R & S
AUTO SALES
Top Quality Used Car Dealer


வங்கியால் உடமைப்படுத்தப்பட்ட
வாகனங்களை விற்பது எமது விசேட திறன்

36 வருட அனுபவம்



HONDA
TOYOTA
GM-MINI VANS

We Sell Bank Repossed Cars
Accident Vehicle Repair
Computerized Painting
Motor Vehicle Accident
Traffic Tickets



தமது சிறப்பான சேவையால் அதி உயர் விருது பெற்ற
Radha

R & S Auto Sales Inc.
Radha Motor Inc.
3030 Markham Road
Scarborough, ON
416-412-3838
416-836-5825




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழில் காலக்கணிதம்..

யவனர்கள் தாழ்ந்த பிறப்பை உடையவர்கள். எனினும் இந்த விஞ்ஞானம் (காலக்கணிதம்) அவர்களுடன் ஒன்றிணைந்துவிட்டது. இந்த யவன சோதிடர்களே ரிஷிகளாகப் போற்றப்படும்போது பிராமணச் சோதிடர்களின் மதிப்பு எத்துணை பெரியதாய் இருக்கவேண்டும்.

மிகப்புராதனமான காலக்கணிதநூல்கள் என வராகிமிஹிரர் குறிப்பிட்டுள்ள சூரியசித்தாந்தம், வசிட்டசித்தாந்தம், பிதாமக சித்தாந்தம் என்பன அவைதோன்றிய வடிவில் எமக்குக் கிடைக்கவில்லை. வரலாற்றுக்காலத்துக்கு முற்பட்ட காலக்கணிதர்களக எண்ணப்படும் கார்க்கியர் மற்றும் பராசரர் ஆகியோரின் தொகுப்புக்களும் இன்று முழுமையாகக் கிடைக்கப்பெறவில்லை.

ஆகவே இந்திய சோதிடக்கலையின் வளர்ச்சியில் கார்க்கியர் பராசரர் உள்ளிட்ட புராதன இந்திய அறிஞர்களின் பங்களிப்புக்கள் எவை யவனாச்சாரியார் போன்ற கிரேக்கர்களின் பங்களிப்புக்கள் எவை என்பதைப் பிரித்தறிந்து கொள்வது கடினமாகும்.

## இந்திய வானியலின் வரலாறு

இந்தியர்களின் காலக்கணித வரலாற்றை ஆராயுமிடத்தே ஆதியில் நாள் என்ற ஒன்றுக்குமட்டுமே வரைவிலக்கணம் வழங்கப்பட்டிருப்பதைக் காணமுடிகிறது. காலையில் சூரியன் உதிக்கும் நேரம் தொடக்கம் மாலையில் மறைந்து அடுத்த அடுத்தநாள் காலை சூரியன் மீண்டும் உதிக்கும் வரையிலான காலமே ஒருநாள் என்று அறியப்பட்டது. அதிகாலையில் சூரியன் கடலுள் இருந்து வெளிப்படுவதாகவும் மாலையில் மீண்டும் அது கடலுக்குள் குளிக்கச்சென்றுவிடுவதாகவும் மக்கள் நம்பினர்.

நின்கடற் பிறந்த ஞாயிறு பெயர்த்தும் நின்
வெண் தலைப் புணரிக் குடகடல் குளிக்கும்

என்னும் பாடல் ஒன்றை சங்க இலக்கியமான புறநானூற்றில் காணமுடிகிறது.

சூரியன் உதிப்பதையும் மறைவதையும் மாத்திரம் வைத்துக்கொண்டு காலத்தைக்கணிப்பது இயலாத காரியம். இந்நிலையில் சந்திரனை வைத்து நாட்களைக் கணிப்பது இலகுவாயிற்று. முழுநிலவாகக் காட்சியளித்துப் பின்னர் ஒவ்வொருநாளும் படிப்படியாகத் தேய்ந்து ஒரு நாள் முற்றாக மறைந்து அடுத்தநாள்முதல் மீண்டும் படிப்படியாக வளர்ந்து முழுநிலவாகக்காட்சியளிக்கும் சந்திரனை ஆதாரமாகக்கொண்டு சாந்திரமாதத்தை உருவாக்கினர். சம்ஸ்கிருதத்தில் மாச என்பது சந்திரன் மாதம் இரண்டையும் குறிக்கின்றது. திங்கள் என்பது தமிழில் மாதத்தையும் சந்திரனையும் குறிக்கின்றது என்பது மனங்கொளத்தக்கது.

நிலவு வானில் தோன்றாத நாள் அம்மாவாசை என்று குறிக்கப்பட்டது. அம்மாவாசை நாளும் அதனைத்தொடர்ந்து வளர்பிறைப்பக்கமாகவரும் (பூர்வ பக்கம்) பதினான்கு நாட்களும் அடுத்துவரும் முழுநிலவுநாளான பௌர்ணமியும் அதனைத்தொடர்ந்துவரும் தேய்பிறைப்பக்கத்துப் (அபரபக்கம்) பதினான்கு நாட்களும் கொண்ட சாந்திரமாசம் உருவாக்கப்பட்டது. மாதத்தின் நாள் ஒவ்வொன்றும் திதி என்று அழைக்கப்பெற்றது.

வசந்தம், கிரீஷ்மம், வர்ஷம், சரத், ஹேமந்தம், சிசிரம் (இளவேனில், முதுவேனில், கார், கூதிர், முன்பனி, பின்பனி) என்னும் அறுவகைப் பருவகாலங்கள் குறிப்பிட்டகால இடைவெளியின்பின் மீண்டும் மீண்டும் சுழற்சிமுறையில் வருவதை அவதானித்தார்கள். நூறு வசந்தங்களைக் காண்பாயாக என்று வாழ்த்தத் தொடங்கினார்கள். நூறு வர்ஷங்களைக் காண்பாயாக என்று வாழ்த்தினார்கள். வர்ஷம் என்பது முதலில் மழைகாலத்தைக் குறித்தது. பின்னர் அதுவே ஆண்டு என்பதைக் குறிக்கும் சொல்லாயிற்று.

இதனைத்தொடர்ந்து நட்சத்திரமண்டலத்தைப் பின்புலமாகக்கொண்டு சூரியனின் நிலையை அவதானித்து சூரியமாதங்களைக் கணித்தார்கள். பன்னிரண்டு சாந்திரமாதங்களில் உள்ள நாட்கள் 360 மட்டுமே. பருவகாலக் கலண்டரின்படியும் சூரியமாதக் கலண்டரின்படியும் ஒருவருடம் என்பது 365 1/4 நாளாகும். சாந்திரவருடங்களையும் சூரிய வருடங்களையும் சமப்படுத்தும்வகையில் சாந்திரமாதக்கலண்டரில் இடையிடயே அதிகமாதங்கள் (கூடுதல் மாதங்கள்-intercalary months) சேர்க்கப்பட்டன.

ஒருகுறிப்பிட்ட மாதத்தில் ஒரு குறிப்பிட்ட நட்சத்திரம் பௌர்ணமிநாளில் சந்திரனுக்கு அருகில் காணப்படுவதை அவதான-ித்த இந்திய வானநூலோர் அந்த மாதத்துக்கு அந்த நட்சத்திரத்தின் பெயரையே வைத்தனர். சித்திரைக்குச் சித்திரை வைகாசிக்கு விசாகம் ஆனிக்கு மூலம் ஆடிக்குக் கேட்டை ஆவணிக்குத் திருவோணம் புரட்டாதிக்குப் பூரட்டாதி ஐப்பசிக்கு அஸ்வினி கார்த்திகைக்குக் கார்த்திகை மார்கழிக்கு மிருகசீரிடம் தைக்குப் பூசம் மாசிக்கு மகம் பங்குனிக்கு உத்தரம் ஆகிய பெயர்கள் வழங்கப்பட்டன.

பின்னர் இந்தப் பெயர்களே சூரியக்கலண்டரில் வரும் மாதங்களுக்கும் வழங்கப்பட்டன. சூரியன் மேடராசியில் நிற்கும்போது முடியும் மாதத்தை சித்திரை என்று குறிப்பிடலாம் என்று பிரமசித்தாந்தம் கூறுகிறது.

சாந்திரமாதக்கணிப்பில் மாசப்பிறப்பு என்பது அம்மாவாசைக்கு அடுத்தநாளான பூர்வபக்கப் பிரதமை திதியில் வரும். சூரியமாதக் கலண்டரின்படி சூரியன் ஒரு இராசிக்குள் பிரவேசிக்கும் நாளே அந்தமாதத்தின் முதல் தியதியாகும்.

சாந்திரமாதக்கலண்டரைப் பின்பற்றும் கன்னடரினதும் தெலுங்கரினதும் யுகாதி எனப்படும் சித்திரைப் புத்தாண்டு சித்திரை மாதத்துப் பூர்வபக்கப்பிரதமையில் பிறக்கும். சூரியக்கலண்டரைப்பின்பற்றும் தமிழ் சிங்கள மக்களைப் பொறுத்தமட்டில் அவர்களது புத்தாண்டு சூரியன் மேடராசியில் பிரவேசிக்கும் நாளே சித்திரை முதலாம் திகதியாகும். இவ்விருசாராரின் சித்திரைப்புத்தாண்டு ஆங்கிலக்கலண்டரில் வெவ்வேறுநாட்களில் வருவதற்கு இதுவே காரணமாகும்.

புராதன இந்தியர்களின் காலக்கணிதம் தனித்துவமான அம்சங்கள் பலவற்றை உள்ளடக்கி நிற்பதை மறுக்கமுடியாது. சந்திரனின் கலை-களை அடிப்படையாகக்கொன்டு திதி எனப்படும் நாட்களையும் சாந்திரமாசங்களையும் வகுத்தவர்கள் இந்தியர்களே.

வானமண்டலத்தை நிலையான 27 நட்சத்திரமண்டலங்களாகப் பிரித்து சூரியன் சந்திரன் மற்றும் கிரகங்களின் அசைவுகளையும் பூமிக்கும் அவற்றுக்கும் இடையிலான தூரங்களையும் கணித்து தமக்கே உரிய காலக்கணிதமுறையை உருவாகியவர்கள் இந்தியர்கள்.

மேடம் முதலான பன்னிரண்டு ராசிமண்டலங்கள் பற்றி அறிந்துகொண்டதும் 27 நட்சத்திரமண்டலங்களையும் பன்னிரண்டு ராசிமண்டலங்களாகப் பிரித்தார்கள்.

இவ்வாறுதான் முதல் இரண்டு நட்சத்திரமண்டலங்களான அச்சிவினி, பரணி, என்பனவும் மூன்றாவதான கார்த்திகையின் முதற்காலும் முதலாவது இராசிமண்டலமான மேடத்துள் அடங்கின.

கிறித்துவுக்கு 3000 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே காலத்தைக் கணிக்கும் கலண்டர் முறையை உருவாக்கியவர்களும் இந்தியர்களே. சதுர்யுகங்களும் மனுவந்திரங்களும் கல்பங்களும் இந்தியகாலக்கணிதரின் சிந்தனையில் உதித்தவையே.●

(அடுத்த இதழில் நிறைவு பெறும்.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அர்ச்சனாஸ் & கோ

**அனைத்துவகை பூஜைப்பொருட்களின் களஞ்சியம்**

பூஜைப்பொருட்கள்
மல்லிகைச்சரம்
பூக்கள் பூமாலைகள்
பரதநாட்டிய ஆபரணங்கள்
வீடியோ புகைப்படம்
திரைப்படங்கள் பாடல்கள்


All temple pooja items
Fresh jasmine and flower garlands
Dance items
HD Video & Photography
Passport photos

"உங்கள் இல்லம்தோறும் இறையருள் பெற"

**416-292-0033 www.archanas.ca**

**2950 Kennedy Rd. Unit 10A Scarborough (One Block North of Finch)**

# SABESAN'S Choice



தனி மரத்தினாலான நிலம், நிலவிரிப்பு
சுவருடன் இணைந்த அலுமாரிக் கதவுகள்
யன்னல், கதவு புதுப்பித்தல்
ஆகிய வேலைகளில் தன்னிகரற்றவர்
"விருதுபெற்ற தொழிற்றுறை நிபுணர்"

**Laminate, Mirror, Panel, Closet Droos**
**Carpet, Hardwood, Tiles, Granite Flooring**
**Windows + Doors, Kitchen + Bath**
**Renovation or New!**




*Sabesan's Choice*

**416 605 1990**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நோர்வே தொழிலாளர் கட்சி உபதலைவராக ஈழத்தமிழ் பெண்



நோர்வே ஒஸ்லோ மாநகரத் தேர்தலுக்காக தொழிலாளர் கட்சியின் உபதலைவராக ஈழத்தமிழ் பெண்ணான ஹம்சாயினி தெரிவாகியுள்ளார். அங்குள்ள அன்னை பூபதி கலைக்கூடத்தில் தமிழ் மொழியைக் கற்றுவந்த இவர், தாயகப் பாடல்களைப் பாடுவதிலும் அப்பாடல்களுக்கு நடனமாடுவதிலும் திறமையானவர். நோர்வே தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவின் ஆதரவோடு போட்டியிட்டு உபதலைவராகியுள்ள இவரே, நோர்வேயில் அரசியலில் கால்பதித்த முதலாவது பெண்மணி என்ற பெருமைக்குரியவர்.

## பூமிக்கு அப்பால் வேற்றுலக வாழ்வு

பூமிக்கு அப்பால் வேற்றுலக வாழ்வு பற்றி நீங்கள் அடிக்கடி கனவு காண்கின்றீர்களா? உங்கள் கனவு நனவாவதை நிரூபிக்கும் செயற்பாட்டில் நாஸா விஞ்ஞானிகள் ஈடுபட்டுள்ளனர்.

வாஷிங்டனில் உள்ள நாஸா தலைமையகத்தில் குழு நிலை விவாதமொன்று இடம்பெற்றது. பிரபஞ்சத்தில் உயிர் வாழ்வைத் தேடுவதற்கான நாஸாவின் திட்டத்தை நிபுணர்கள் வெளிப்படுத்தியுள்ளனர். இந்த விடயம் தொடர்பாக தற்போது இடம்பெற்றுவரும் நடவடிக்கைகள் மற்றும் எதிர்கால செயற்பாடுகள் குறித்து அவர்கள் திட்டமொன்றை தயாரித்திருக்கின்றனர்.

மிகவும் அண்மையான காலப்பகுதியில் நட்சத்திரமொன்றைச் சுட்டிக்காட்டி அது பூமியைப் போன்றொரு கிரகமொன்று என்று ஆட்கள் கூறக்கூடியதாக இருக்குமென தொழில்நுட்பத்திற்கான மசாசூசெட்ஸ் நிறுவனத்தின் கோள் விஞ்ஞான பௌதிகவியல் துறை பேராசிரியர் சாரா சீஜர் தெரிவித்துள்ளார்.

2017ல் கண்காணிப்பு செய்மதியை அனுப்புவதற்கான திட்டத்தை நாஸா கொண்டிருக்கிறது. அவற்றைவிட 2018 இலும் கண்காணிப்பு செய்மதிகளை நாஸா அனுப்பவுள்ளது. இந்த தொலைகாட்டிகள் கோள்மண்டலத்திலுள்ள ஏனைய நட்சத்திரங்களையும் கிரகங்களையும் ஆய்வு செய்யும்.

5000 இற்கும் மேற்பட்ட கிரகங்கள் 2009ற்குப் பின்னர் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அவற்றில் 1500 க்கும் மேற்பட்டவை உறுதிப்படுத்தப்பட்டிருக்கின்றன. அத்துடன் கெப்லர் தொலைகாட்டி முதல் முறையாக பூமியின் அளவு கொண்ட கிரகத்தைக் கண்டுபிடித்துள்ளது. திரவ நீர் தொடர்பாக உறுதிப்படுத்தப்பட்டால் அங்கு உயிர்வாழ்வு பற்றிய அனுமானத்தையும் உறுதிப்படுத்த முடியும்.


இதேவேளை பால்வீதி கோள்மண்டலத்தில் ஒவ்வொரு நட்சத்திரங்களும் குறைந்தது ஒரு கிரகத்தைக் கொண்டிருப்பதாக சீஜர் கூறியுள்ளார்.●








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ISSN 1206-0585


# FREE ! Real Estate Classes




## Successful Real Estate Office With Over 300 Salespeople

TOP 5 HOMELIFE OFFICE IN CANADA 2012

TOP 6 HOMELIFE OFFICE IN CANADA 2011

TOP 7 HOMELIFE OFFICE IN CANADA 2010

*No Franchise Fees *No Monthly Fees *No Desk Fees

**International Award Winning Office**

**Top 5th HomeLife Office In Canada-2012**

- Atractive Commission Split.
- Over 300 Salespersons.
- Daily Training, Full Services Office
- 24 Hrs Access to the Office
- Office Open 7 Days/ Week



**HOMELIFE /FUTURE REALTY INC.,** Brokerage
205 -7 Eastvale Dr., Markham, Ontario, L3S 4N7
Bus: 905.201.9977 | 416.264.0101

*Based on TREB data: 2012. (does not include independent or other franchisors). ©2012 HomeLife Realty Services Inc. All Rights Reserved.Each Office is Independently Owned and Operated. Not intended to solicit Agents or Brokers currently under contract.

*INDEPENDENTLY OWNED AND OPERATED*

**Selva Vettyvel**
*Broker of Record*
Tel:416-568-4301


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org